ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

இதழ் 2 சித்தார்த்தி வருஷம் ஆடி மாதம் 4 ம் திகதி வெள்ளிக்கிழமை [20-7-1979] சுடர் 15

UNIVERSITY OF SRI LANKA CAMPUS LIBRARY RECEIVED 1979-7-31 PERIODICALS DIVISION

# நமக்கும் ஒரு பிறவி வாய்த்தது. மனிதனே எண்ணிப்பார்.

இவ்வாறுக கீழே தரப்படும் தேவாரத்து எம்பெருமான் திருநாவுக்கரசர் கூறுகின்றார். எமக்கு ஒரு பிறவி கிடைத்தது. நாம் மனிதர் தான். ஏதோ வகை பிறந்திட்டோம். ஒருதாய் வயிற்றில் பிறந்தோம். எப்படிப் பிறந்தோம். அது தெரியாது. பிறந்த பின் சிலகாலம் அதுவும் எப்படி என்பது தெரியாது. இன்னும் சில நாளில் ஓர் நாள் மெது மெதுவாக உணர்வுகள் தோன்றின. சிரிக்க விளையாட வேடிக்கை பேச பின் பசியால் வருந்த நித்திரை செய்ய விழித்திட எழுந்து மெது மெதுவாகக் கருமம் செய்ய. தந்திரங்கள் யுத்திகள் இவை பாவித்து நம் கருமங்களை விருத்தியாக்கிட; இப்படியாக வாழ்வு தலைப்பட்டது. காமம் பொறாமை கோபம் இவைகள் நம்மை அறியாது நம்மில் புகுந்திருந்தன தாமாக எழுந்து வருத்திட அவற்றினால் நிலையறியாது அவைக்கே இரையானோம். இரையாகிப் பின்னர் பொருள் தேட தொழில் செய்து வருந்தி உழைத்து அவதிப்பட்டு அங்கிங்கோடி பொருள் தேடி கனவானாகியும் தனவந்தராகியும் அறிவாளியாகியும் கலைஞனாகியும் மந்திரியாகியும் தந்திரியாகியும் வேறு வேறு துறைகளில் பொருளும் பொன்னும் புகழும் பெற்று திருமணமாகி குழந்தைகள் பெற்று மாளிகைகள் கட்டி வாகனங்கள் வைத்து வாழ்வில் புதுப்புது சிறப்புக்கள் உல்லாசங்கள் வேடிக்கைகள் விருந்துகள் நகைச் சுவைகள் நாடகங்கள் நாட்டியங்கள் விழாக்கள் காட்சிகள் கோலங்கள் குறிகள் இவையாவும் நாளும் நாளும் நலமுறச்சிறப்ப இச்சிறப்பால் மிகுந்து செல்கின்றோம். இது எல்லாருக்கும் பொதுவாக நடைபெறுகின்றது. முன்பிருந்த மனிதரிலும் பின்பு வரும் மனிதர் இன்னும் இன்னும் வாழ்வை விருத்தியாக்கி வாழ்கின்றனர். இது உலகில் எல்லா மக்களிடமும் மின் வேகத்தில் பெருகுகின்றது. அது இயல்பு. எல்லாரும் இதை முயன்று கொண்டார் தம் ஊக்கத்தால் பெற்றுக் கொண்டார். முயலாதார் பின் தங்கினர். இதுவே உண்மை. இதில் என்ன அதிசயம், இவ்வளவும் உலகில் இயல்பில் அமைய நாம் வாழ்கின்றோம். ஆகவே ஏன் நாம் எம்பிறவியை மதிக்கவேண்டும்? அதில் ஏதும் பெருமை இல்லையே சாதாரணம் தானே என நாம் எண்ணலாம்.

அடுத்து இவ்வகைச் சிறப்பு ஏதும் இலாத பிச்சைச்சோற்றின் நிலையில் வாழும் ஓர் துறவி திருநாவுக்கரசர்! இந்த உலகில் மேலான சிறப்புகள் எதுவும் பெறமுடியாதவர் எவ்வாறு எம்மிலும் உயர்ந்தவராக எண்ணி எம் பிறவியை மதித்திடச் சொல்வது என்பதை எல்லாரும் வாயால் சொல்ல விரும்பாவிட்டாலும் மனதில் எண்ணிப் பார்க்கலாம்.

ஆனால் திருநாவுக்கரசர் இந்த ஒரு நிலையில் வைத்து உங்களை உம் பிறவியை மதித்திடச் சொல்லவில்லை. பதில் அவர் எம்மை நோக்கி தமக்கு ஒரு பிறவி வாய்த்தது அதை மதிக்கச் சொல்லுகின்றார். ஏன் தன்னை மதிக்கச் சொலுகிறார். அவர் ஒரு சாமி. அவருக்கு புகழ் அதிகம் என்றதால் சொல்கின்றாரா?

உலகில் விஞ்ஞானத்துறை கல்வித்துறை இவற்றில் மேம்பட்ட எத்தனையோ மக்கள் உலகிற்கு எத்தனையோ சுகம் தரும் சுபிட்சம் தரும் வாகனம் வண்டி ஒலிகள் ஒளிகள் முதல் பல கல்வியின் சிறப்புகளை காட்டி வைத்துப்போயிட மக்களை வசப்படுத்தும் நகைச்சுவை வேடிக்கை முதல் பல தரப்பட்ட சுவையுடைய பேச்சாளர் அம்மன்கள் சுவாமிகள் இருந்திட இவர் தன்னை மதித்து எம்மை அவரைக் கௌரவிக்கச் சொன்னாரா? ஏன் அப்படிச் சொல்கின்றார்? என்பது கேள்வி.

திருநாவுக்கரசரை பெரிய புராணம் காட்டுகின்ற வகையை நோக்கினால் கந்தை மிகையாம் கருத்தும் கையில் உளவாரப் படையும் என்றே பெரிய புராணம் காட்டுகின்றது. அவர் சிந்தையின் உயர்ந்த கொள்கை என்ன என்றால் கந்தை ஆடையும் [நான்கு முள வேட்டி போன்றது] தனக்கு மேலதிகமானது. நாணம் இலாவகை உடலைப் பேண ஓர் துணி காணும் என்பதே சிந்தையின் கொள்கை. திருக்கையில் உளவாரம் அது எம்பெருமானுடைய கோயிலில் தூய்மை நிலவ; கோயில் உள் முற்ற வெளியில் வெளிமுற்ற வீதியில் முளைத்திடும் செடிகொடிகளை செருக்கி தூய நிலையாக்கிடக் கொண்டது.

ஆகவே சித்தத்திலும் தூய்மை திருப்பணி செய்ய விரும்பியதும் தூய்மை. இது இன்று ஆருக்கு விளங்கும்? ஒருத்தருக்குமே விளங்காது எனவே எண்ணுகிறோம். ஏன் அப்படிச் சொல்வோம் என்றால் எல்லாரும் நன்கு படித்து பட்டம் பெற்று உத்தியோகமானவரும் மேடைப் பேச்சாளருமாக நிற்கின்றனரே அன்றி படித்ததை பிறர்க்கு போதிப்பதிலும் தாம் அவற்றைச் செய்வதில் முனைவாரைக் காணோம்.

இன்று கோவில் ஒன்றில் சென்று கூட்டுதல் அல்லது செருக்குதல் செய்திட என்றால் அதற்கு முன்னாக ஓர் மகாநாடு அதில் தீர்மானம் பின்னர் ஓர் படப்பிடிப்பு பின்னர் பத்திரிகைப் பிரசுரம் அதன் பின்னர் ஓர் பாராட்டு விழா இதுவாகவே தொண்டுகள் நடைபெற உள்ளன, தொண்டு செய்வது என்றால் ஏதும் ஓர் சிறப்புரை பாராட்டப் பெறத் தொண்டு செய்கிறாரே அன்றி தன் உணர்வில் தெளிந்து தாமாகத் தொண்டுசெய்வாரைக் காணோம்.

பெரிதாக பிரசங்கம் செய்வார் உளவாரம் பிடித்து ஒரு திருக்கோயில் வீதியில் செருக்குவது தமக்கு கௌரவக் குறைவு என்றே நினைப்பர். வீதி கூட்டுவது செருக்குவது வேலைக்காரனுடைய வேலை என மக்கள் மதிக்கின்றனர்.

அடுத்து சில அடியார்கள் இத்தொண்டைச் செய்வதற்கு மனம் கொள்வாரும் கோயில் செல்ல மனம் கொள்வாரில்லை ஏன் என்றால் நாம் பணி செய்யும் இருப்பிடத்தை கோயில் நிர்வாகம் அருவருக்கத்தக்க அநாகரீகச் செயல் மூலம் அபசாரங்கள் நிறையச் செய்திடும் போது நாம் ஏன் இங்கு போய் என்ற மன அழற்சியும் ஏற்படுகின்றது. இதை என் செய்யலாம். பல கோயில் நிர்வாகமே பத்தியுடைய மக்கள் கையில் இலாது பதில் மூர்க்கமும் முனிவும் உள்ளார் கையில் உளது.

ஆனால் உளவாரத் தொண்டர் திருநாவுக்கரசர் இந்த புனிதத் தொண்டால் நிலத்தில் இயல்பில் வளரும் செடிபோன்ற தம் உள்ளத்து இயல்பில் எழும் குணங்களாய காமம் குரோதம் முதல் பல துயரச் செயல்களை அறுக்கின்றார். எல்லாவித மான மக்கட்கும் இந்த உளவாரப் படை ஓர் எடுத்துக்காட்டாகவே உளது. இது தான் வழி இதைவிடச் சிறந்த வழி நீர் உய்யும் மார்க்கத்திற்கு வேறில்லை என்றே சொல்கின்றார் போன்றே அவர் திருக்கையில் உளவாரமாயது, ஒருவன் தன்னிடத்து எழுகின்ற தய எண்ணங்களை இத்தகைய தொண்டுகளால் நீக்கலாமன்றி வேறு வழியில்லை,

சிந்தையில் பற்றற்ற வாழ்வு திருக்கையால் இறைவன் திருவீதித் தொண்டு இது நடைபெற்று வரும் வேளை சித்தம் உயர சிவன் அருளைப் பற்றிக் கொண்டு தில்லைச் சிதம்பரம் செல்கின்றார்.

அங்கு பரம ஆகாய வெளியில் தன்னந்தனியான திருக்கூத்தைக் கண்ணாரக் காண்கின்றார். அங்கு ஊனும் உயிரும் உருகச் செய்யும் கூத்தைக் கண்டதும் தன்னை மறந்த நிலையில் பாடல் வெளிவருகின்றது. தூய உள்ள அன்பால் அருளூறித்தித்திக்கும் தேன் அருந்தி இத்தேனை அமுதத்தை அள்ளி உண்டிட அருள் வந்த வகையை நினைந்து ஓகோ எனக்கு இதை அநுபவிக்க ஓர் பிறவி வாய்த்தது. இப்படிப் பிறவியைப் பெற என்ன தவம் செய்துளேன் என்பதே கேள்வியாக எழ உள்ளம் கனிந்து பாடும் பாடல் கருநட்ட கண்டனை எனத் தொடங்கிப் பாடுகின்றார்.

அப்பாடலையே உங்கட்கு இங்கே தந்துள்ளோம். எமது ஆகமங்கள் கோயில்கள் இரண்டும் முன்பிருந்த அருள் நிலையைப் பெற்று நன் நிலைப் பட வேண்டும். கோயில்கள் எங்கும் ஆகமம் சொன்ன விதிகளைப் பேணி கோயில் வழிபாட்டிற்கு மட்டும் உரித்தாக அமைய வேண்டும்.

சிவன் உள்ளத்து இருக்கிறான். பெரியவன். புண்ணியன். ஆநந்தன் அருள் உடையவன். அவன் இருப்பிடத்தில் ஆசாரம் அமைதி விளக்கு நீர் பூ இவை என்றும் குன்றாவகை பெருகவும் அடியார்கள் மனமுவந்து சென்று வழிபட்டுய்யவும் ஆகமம் சொன்ன வாறு அன்பின் நிலையில் கோயிலைப் பரிபாலித்தல் ஒவ்வொருவரதும் கடமையுமாகும்.

எமது மனத்தில் உள்ள அழுக்குகளான பேராசை அகந்தை வஞ்சனை குரோதம் காம உணர்வு பகைமை எட்டுணையேனும் கோயில் செல்வார்க்கு ஆகாது. உலகில் எல்லாராலும் அமைதியை விரும்பப் படும். ஆனால் அமைதி இன்மையை வேடிக்கையை ஒருசிலர் தான் விரும்புவார். இன்று ஒரு சிலரின் வேடிக்கையால் கேளிக்கையால் எத்தனையோ கோயில்கள் நாசமாயின! அங்கு போவதை நான் அறிய பல பெரியார்கள் நிறுத்திக் கொண்டனர்.

ஏதோ தாம் அறிந்த அளவில் தனித்திருந்து கும்பிடலாம் என எண்ணிக் கொள்கின்றனர். ஏன் அப்படி மக்கள் மனம் வருந்திட கோயில் நிர்வாகங்கள் தாம் நடத்திட வேண்டிய நல் நிலைகளை நீக்கிட வேண்டும், எங்கும் எல்லா இடமும் ஆகமம் வலி உறுத்து கின்ற அமைதியும கட்டுப் பாடும் பத்தியின் தூய பூசனையும் நிகழ்வுறு மேல் அது எல்லார்க்கும் நன்று. எல்லாரும் இதை உணர்ந்து ஏற்பார். அது இல்லாது கட்டுப்பாடிலாத வஞ்சக நெஞ்சமும்; பொருள் பெறும் நோக்கமும் புகழின் நோக்கமும் இருந்திட கோவிலை நிர்வகிப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைந்தாலோ அல்லது கோவில் அர்ச்சனை முதல் பல தொண்டும் செயும் அந்தணர் நினைத்தாலோ சைவம் என்றுமே நல்நிலைப்படாது. இது வன்றி இச்செயலால் பாதகங்களும் துயரமும் என்றும்நாட்டில் பெருகி மக்களைத் துயருறுத்தும்.

கோயிலில் இறைவன் சந்நிதி சென்று அங்கு எம் சித்தம் தூய்மைப் பட நடந்து கொள்ள முடியா தெனின் வேறெங்கு போய் நாம் தூய்மைப் படுவோம்? உயர்வோம் சிந்தியுங்கள். இன்று நமது அந்தணர்கள் மனக் குரோதங்களாலும் கட்டுப்பாடில்லாத மிருக வாழ்வாலும் காடைத் தனத்தாலும் வர வரக் கெட்டுப் போகின்றனர். இது உண்மை, இதை அந்தணர் குலம் ஏற்க வேண்டும். என்று அந்தணர்கள் தமது தவறுகளை உணர்ந்து கொண்டு நல்லவகைளை ஏற்றுக் கொண்டு கோயில்களில் தமது கிரியைகளை மிக்க புனித மாகச் செய்திட முனைகின்றனரோ அன்று தான் சைவம் ஓங்கும். அது தான் சைவ உயர்வு. அவர் உயராமல் இன்னம் இன்னம் கீழே நிற்க சைவம் வளர்வது என்பது பகற்கனவு!

ஆதலின் நமது முன்னைப் பெரியோர் வாழ்ந்து காட்டிய அற வழிகளை நம் மக்கள் உணர்ந்து கோயில் எத்துணைப் புண்ணிய முடையது, பெருமை உடையது எனச் சிந்தித்து அதை வேடிக்கைக்கும் பாட்டுக் கச்சேரிக்கும் நகைச்சுவைக்கும் உரிய இடமாக்காமல் உயர்ந்த நெறிகளைக் கடைப் பிடித்து நாம் ஒழுகி மேலான நிலையை அடைய எம்பிரான் திருநாவுக்கரசர் பாடிய பாடலைக் கீழே தருகின்றோம்,

ஒவ்வொரு பாடலும் உங்கட்கு ஓர் உபதேசமாக அமைவதையும் காணுங்கள். தனக்கு ஒரு பிறவிவாய்த்தது அதை நீங்கள் மதித்துப் பாருங்கள் எனவே சொல்வதை நீங்கள் சிறிது சித்தத்தில் எண்ணிப் பாருங்கள்! இன்று கோவில் சென்று வழிபடும் நீங்களும் அப்படிச் சொல்லக் கூடிய நிலையில் உள்ளீரோ என எண்ணிப்பாருங்கள்.

கருநட்ட கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதில் எய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்டம் ஆடியைத் தில்லைக்கு இறையைசிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே.

கருமை உருவாகிக் கொண்ட கண்ட முடைய கடவுளை; அண்டங்கட்கு தலைவனை நாம் வேண்டிய நற்பொருள் தரும் கற்பகத்தை உலகினை அழித்திடும் போர்க் கொடுமை நாட்டிய மூன்று மதிலையும் எய்திட வல்லானை; செந் தீ முழங்கிட திருவுடைய நட்டம் ஆடுகின்றவனை; தில்லை என்னும் பதிக்கு இறைவனை அங்குள்ள சிற்றம்பலத்துள் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழிலையும் நடத்திடும் பெரும் திருக்கூத்தை ஆடுகின்ற பெருமானை தேவர்கட்கு எல்லாம் கடவுள் என்று வாழ்த்துவன். 1

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்து நட்டம்
என்றுவந் தாய் என்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே.

உள்ளம் ஒருமைப் பாட்டுடன் அமைய இருந்து சிவனைநினையுங்கள். உமக்கு இதனால் ஒரு பழுதும் இல்லை. கொடுமையை உடைய காலனை திருக்காலால் உதைத்தருளி அடியவர்க்காக வென்றவன். எம்பெருமானைச் சென்று கண்டு தொழு மின்கள். இந்த தில்லையுள் நின்று ஆடியருளும் பெருமானது திருக் குறிப்பு மகனே நீ என்று வந்தாய் எனக் கேட்கும் முறையாகவே திருவாய்க் குவிப்பு அமைய நிற்கின்றான். இதுவே எம்பெருமானது திருக்குறிப்பாக இருக்கின்றது.

உலகில் உற்ற அல்லல் பெரிது. இந்த அல்லல் சில கால் துன்பமாகவும் சில கால் இன்பமாகவும் இருக்கும். சில கால் வெற்றியாகவும் சில கால் தோல்வி போலவும் இருக்கும். கொலையும் கொடுமையும் பொல்லாதது என உணர்ந்தாலும் அதையும் செய்து மனம் இன்பப்படவேண்டி இருக்கும். சில பெரியார்களை நக்கல் செய்து வேதனைப்படுத்தி இப்படியான செயல்களில் மகிழ் சிறந்து திருப்தியாகி சந்தோசப்பட்டு அ அச்சா என பெரிதும் சந்தோசப் படவும் வேண்டி வரும். இவ்வுலகில்இவைநீளநெடுகஉள்ள காரியம். இதனால் வரும் இன்ப துன்பத்தில் நின்றும் எவரும் தாண்ட முடியாது, திரும்பத்திரும்ப கோழி முட்டை போல் மனம் இவற்றில்சறுக்கிடுதல் இயல்பு

ஆனால் இவையாவும் கொண்ட வாழ்வில் இந்தச் சங்கடம் பெருகியபோது அவையை இலேசாக விடமுடியாது! ஆதலால் இறைவனை பற்றுவது என்றால் முதல் இவை விடுதற்கு கடவுளை ஓயாத ஒருமைப்பாடுடைய மனத்தால் தியானிக்கும் படி சொல்கின்றார். அதனால் ஒன்றி இருந்து நினைமின் என முன்னாகத் தான் கண்ட காட்சியை நீவிரும் அனுபவித்திட ஓர் தாகத்தை வருவிக்கின்றார், எல்லா வேலையிலும் மிகக் கடுமையான வேலை மனதை ஒருமைப் பாட்டுடன் வைத்திருத்தல். வேறு வேறு வேலை செய்தால் பிரயோசனம் உண்டு. பணம் வரும் புகழ் வரும் இது செய்து என்ன பிரயோசனம்? யார் புகழ்வார். யார் காசு தருவார் எனக் கேட்பார்க்கு அது காசு வராட்டாலும் உமக்கு இச்செயலால் ஏதும் தீமை வராது என்கின்றார்; ஏன் எனில் நான் உம்மை நினையச் சொல்லும் ஆள் மிகப்பெரியவர். எப்படிப் பெரியவர் என்றால் பொல்லாத கொலை செய்யும் இயமனைக் காலால் உதைத்து அவன் கொடுமை நீக்கியவர், ஆகையால் அவரை ஒருமைப்பாட்டுடன் நினைப்பதால் உமக்கு ஊனம் இல்லை எனச் சொல்லி அடியவர்க்காக அவர் காலனைக் கொன்ற கருணையையும் காட்டின பின் நீவிர் சென்று தில்லைச் சிதம்பரத்தில் அவனைத் தொழுமின் தொழுதிடும் வேளை அவன் காட்சி மகனே என்று வந்தாய் என வாய் குவித்து நின்று கேட்பது போலாயது என்கின்றார், இது அவரின் கருணையை நமக்கு போதித்தவாறு! சென்று தொழுமின் என நீர் போய் தொழுங்கள் உண்மையாக இதனைக் காண்பீர்கள் என்றவாறு. இதனாலே திருக்கூத்தின் வண்ணம் நேரில் கண்டவாறும் பிறரும அதனைத் தரிசித்து உய்தி அடைய வேண்டிய வண்ணம் குறிப்பிடுகின்றார், 2

கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக் காண்ப தென்னே
நன்மன வர்நவில் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது போலப் பொலிந்திலங்கி
என்மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே.

கல்லுப் போன்ற இரக்கமிலாத மனம் உடைய மக்களே வீணாகக் கழிந்து போகும் கருத்துக்களைச் சொல்லி என் நீர் காணப்போகின்றீர்? இரக்கம் உண்மை தருமம் இவை நிறைந்த நல்லமனமுடையவர் சொல்லும் தில்லை நகரில் சிற்றம்பலத்துள் திருக்கூத்து பொன்னின் மலைமேல் இருந்த வெள்ளி மலை போன்று பொலிந்து இலங்கி நின்றும் என் மனதிலே ஒன்றாகிப் புகுந்து கொண்டான். ஆனால் அவன் வந்த அடிச்சுவடுகள் ஒன்றும் என்னிடத்து காணவில்லை.

அருள் பொலிய ஆடுகின்றான். அது கண்டேன். ஆனால் என்மனதிலும் அவனே தானாக இருக்கக் கண்டேன். அவ்வண்ணம் அவன் இருப்பவனாகில் எவ்வண்ணம் வந்தான்? அப்படி வந்திருந்தால் வந்த அடிச்சுவடுகள் என்னிடத்து காணப்படவில்லை. ஆகவே என்னில் உள்ளது தான் அங்கும் நின்றது. அங்கு போய்க் காண என்னில் உள்ளதும் வெளிப்பட்டது.

கன்மனவீர் என்றது இரக்கமிலாத நெஞ்சத்தவரைக் குறித்தது: இரக்கம் இல்லாதீர் உம்மால் உலகிற்கு உபதேசித்து என்ன பிரயோசனம் அது பயன் தராது என்றதால் கழியுங் கருத்தே சொல்லிக் காண்பது என்னே என்கின்றார். நீர் உபதேசித்தீர் நற்கருத்துச் சொன்னீர் நீர் கண்டது என்னவாகும் என்ற வகை கேட்கின்றார். இதனால் உலகில் நீர் போதிப்பதை விடுத்து இங்கு இந்த அற்புதத்தைப் பாரும் என்கின்றார்.

கழியும் கருத்து என்றது சொல்லுமளவும் இன்பமாகி சொல்லிய பின் பயன் தராதது என்றபடி. நன்மனமுடையவர்க்கே சிதம்பரக் காட்சி இனிது பயக்கும் ஆதலின் நன் மனவர் சொல்லும் சிதம்பரக் கூத்து என்கின்றார், நன் மனம் என்றது இரக்கம் அன்பு தவம் ஞானம் இவற்றுடன் இணைந்தது. இவர் சொல்லும் திருக்கூத்தை நன் மனவரன்றி ஏனையோர் சொல்ல மாட்டார் என்றவாறு. இன்றைய போதனையாளர் பெரும்பாலும் கல்லைப் போல் நெஞ்சுடையவர் என்பது உண்மையாக இப்பாடலால் நிரூபிக்கப் படுகின்றது. 3

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

குனித்தருளிய புருவமும் கொவ்வைப் பழம் போன்று சிவந்த திருவாயில் முகிழ்த்த கருணையின் சிரிப்பும் கங்கை நீர் பொலிதலால் குளிர்ந்த சடையும் பவளம் போல் மேனி மேல் பூத்த பால் போலும் வெள்ளை நீறும் சிந்திக்கும் சிந்தைக்கு தித்திப்பாகும் இனித்தம் நிறைந்த தூக்கிய திருப்பாதமும் காணப்பெற்றால் இந்த பெரும் உலகில் மனிதனாகப் பிறந்திடும் பிறவியும் வேண்டுவதுஒன்றே

மனிதனாகப் பிறப்பது வேண்டுவது இந்த ஒரு காட்சி காணத்தான் என்பது குறிப்பு. ஏனெனில் ஏனைய பிறவியாக தேவராக முனிவராக கடவுளராக எல்லாப் பிறப்பிலும் இதைக் காணமுடியாது. ஐந்து புலன்களுடைய மனிதப் பிறவியில் தான் இவை கைகூடும்; இந்தக் காட்சி பெற முடியாதார் பிறவி மிருகமாதல் நன்று என்பதுவுமாம். எல்லாப் பிறப்பும பிறந்து களைத்து இந்தப் பெரும் காட்சி என்றும் அழியாத ஆநந்தத் திருக்கூத்துக் கண்டபின் அக்களைப்பெலாம் நீங்கி கவலை ஒழிந்தேன் என்கின்றார் மாணிக்கவாசகர். அற்புதக் கூத்தின் கோலத்து அருமைப்பாடு இங்கு எடுத்துப் பேசிடும் போது இப்பேற்றை நமக்கு நினைவு படுத்துகிறார் திருநாவுக்கரசர். தாம் கண்ட அருள்வடிவமாக விளங்கியது சொல்லப்பட்டதே குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ஞ் சிரிப்பு பனித்த சடை பால்வெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணீற்றின் இனிய கோலம் இவையன்றி இனித்த முடைய எடுத்த பாதம் இவையாவும் எய்துதற்கரிய பேருகி சிந்தையில் அடங்கிடாத தாகி நிற்றலால்; தான் பட்ட அல்லல் பாடுகளை நினைவு கூர்ந்து இத் தகைய அல்லலுடைய பிறவி வேணடுவதோ வேண்டாமே? ஏன் பிறந் தேன் என்றெல்லாம் நினைந்திருந்தார்க்கு இது கண்ட பின் ஐயோ துயர் கண்டு இகழ்ந்த என் பிறவி நிச்சயம் வேண்டும் என்ற துணிவு பெறப்படலால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்து என் கின்றார். இது கூத்தின் அருமை தான் கண்டு சொல்கிறார். நான் காணுதனுன் எவ்வாறு இதற்குமேல் விவரிப்பது. அவர் இனிக்கிறது என்கின்ருர். நான் இதற்கு மேல் என் சொல்லிட? 4

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்தில்லை அம்பலத்துக்
கூத்தனுக் காட்பட்டு இருப்பதன் றேநந்தங் கூழைமையே.

நமக்கு ஈது ஓர் பிறவி வாய்த்துக்கொண்டது. இக்காட்சி இன்று காணவே இது வாய்த்துக் கொண்டது. இதை நன்கு எண்ணி மதியுங் கள். அருச்சுனனிற்குப் பாசுபதம் ஈந்தருளிய கடவுள் இவர். பத்த ராக உள்ளீர் இதை எண்ணிப்பாருங்கள். வளையாத மேருமலையை வில்லாக வளைத்து நாராயணக் கடவுளை அம்பாகக் கோத்து அன்று முப்புரமும் எரியச் செய்தவன். அவன் தில்லை அம்பலத்தில் கூத்தாடு பவன். இவனுக்கு ஆட்பட்டு இருப்பது தான் நாம் செய்யும் வேளா ண்மை.

கூழமை — என்பது வேளாண்மை என்பர். வேளாண்மை செய்வார் க்கு வித்துப் பயனுவது. வித்து முளைத்து பயிராகி மீண்டும் ஒருவித்து பல வித்தாகப் பெருகி வளம் தந்து உண்ணவும் வைத்து மீண்டும் விதைத்திட வித்துமாவது. இதே போன்று தாமும் சிவன் என்னும் வித்தை முளைக்கச் செய்து சிவபோகம் முறுகி முதிர்ந்து விளையச்செய் கிருர் ஆதலின் நம் வேளாண்மைத் தொழில் தில்லை அம்பலத்துக் கூத்தனுக்கு ஆட்பட்டிருத்தலே என்கின்ருர். அவனேடு அணையும் பே ரின்பம் உணர்த்துவார் உலக மக்களை நோக்கி நமக்கு இந்த வழியில் ஓர் பிறவி வாய்த்தது; நீவிர் என்செய்கின்றீர். உமது வேளாண்மை பல பயன் தருவது உண்மை; ஆனுல் அதன் பிரயோசனத்தையும் எமது பேற்றையும் எண்ணிப்பாருங்கள் என்கின்ருர். 5

பூத்தன பொற்சடை பொன்போல் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி அரித்தன பல்குறட் பூதகணம்
தேத்தேன என்றிசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள ரோஎன்றன் கோல்வளைக்கே.

கொன்றை மலர் பூத்து அலர்ந்தது போன்று பொன்னின் சடை பொன் போல் மிளிர; அருள் பெற்று நிறைந்த சிவகணங்கள் ஆர்த் தனவாக; பலவாகும் குறிய வடிவுடைய பூதகணங்கள் தாளத்திற்கமைந் தனவாகிய வாத்தியங்கள் பல முழக்கின; இவ்வாறு அமைய வண் டுகள் தேத்தென என இரைந்து இசைபாட விளங்கிடும் சிற்றம்பல த்து நின்று கூத்தாடிடும் பெருமானைப் போல் நல்வளையல் அணிந்தம் என் நாயகிக்கு வேறு மணவாளன் உளரோ?

கூத்துன் இயல்பு பொனபோல் மிளிரும் சடையுடன் நின்றவாறு. பூதங்கள் இசைக்கும் கருவி வாத்தியமுடன் நின்று கூத்துனைப் போற்ற சிவகணங்கள் அற்புதப் பரவசத்தால் ஆர்த்தமை நேரில் கண்டவாறு சொல்லப்பட்டது, இக் கூத்து இசைக்கு நாடற்கரியது! ஆனுல் இசை யை எழச் செய்வது, இசைக்குரிய கூத்தாக இது அமைவதில்லை. எல்லா ஓசையும் போய் அடங்கும் இடமே கூத்தின் எல்லை. ஆகையில் கூத்தனில் கூத்து வல்லாருளரோ எனக் கேட்கின்ருர். இந்தக் கூத்தால் அருள் பிறக்கின்றது ஞானம் எழுகின்றது உண்மை சுரக்கின்றது. இது ஏனைய கடவுளார் இயலாமை பற்றிய குறிப்பாவது. தன்னுள்ளும் தானுன தன்மை உணர்த்தி ஆடியருள்கின்ருன் சிவன். அவன் தனது நாயகன் அவனுடன் அணைந்து இன்று பெற்ற இன்பம் சொல்லால் உணர்தற்கரியது. இங்கு தன்னை ஒரு பெண்ணுகப் பாவித்தமையால் கோல்வளைக்கே என்ருர், இதனுல் தான் ஆன்மா என்றும் பரமான் மாவான சிவத்துடன் ஐக்கியப்பட்ட இன்பம் பேசற்கரியது என்றும் பெறப்பட்டதால் இவனிலும் பார்க்க எனக்கு ஒரு கணவன்இன்பம்தர உண்டோஎனக் கேட்டவாறு, இன்பத்தின் ஆற்ருமை பேசப்பட்டது.

தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது. தெரியேன் ஆவா செத்தேன் அந்தோ சொல்லுவதறியேன் வாழி முறையோ என்றெல் லாம் சிதம்பரக் கூத்தன் மெதுவாகத் தீண்ட எழுந்த இன்பம் எலும் பின் துளையை எல்லாம் உருக்கும் படி நின்றது என்க. 6

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண் ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலும்என் பாவிநெஞ்சில்
குடிகொண்ட வாதில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே.

முடி மீது அணிந்து கொண்ட ஊமத்த மலரும் மூன்று கண்க ளின் பார்வையும் புன் சிரிப்பும் உடுக்கு (துடி) ஏந்திக் கொண்ட கையும் மேனி நிறையப் பூசிய வெண்ணீறும் சுரித்த கூந்தலுடைய அம்மை தனது ஒரு பாகத்து நிற்க; பாயும் புலியை உரித்து உடுத் திய தோலும் நான் இன்று காண என் பாவி நெஞ்சில் குடி இருப் பக் கொண்ட கடவுளே தில்லை அம்பலத்து ஆடியருளும் அப்பனின் ஒலம் பொலிக்கும் திருவடியாகும்.

தில்லைச்சிதம்பரத்து தான் நேராகக் கண்ட கூத்து நெஞ்சில் நிலவக் கண்டு கொண்டார். தன்னில் உள்ளது தான் அங்கு ஆடியருள் கின்றது. இத்தனை நாளும் அதை உணர முடியாது தடுத்துவைத்தது தான் புரியும் பாவச் செயல் ஆனமையின் தன்னைப் பாவி என்றும் இப்பாவி நெஞ்சிலும் நீ குடி கொண்டனையோ எனக் கேட்கின்ருர் சிதம்பர தரிசனப்போதுதான்தன்னைகண்ணுடியில் காட்டுவபோல இருத் தலின் பாவி நெஞ்சில் குடி கொண்டது. வெளிப்படுத்திக் கொள்கின் ருர் இது சிதம்பரத்தின் அருள் மிகு புண்ணியத்திறன் வெளிப்பட லால் அம்பலக் கூத்தன் குரைகழல் எனச் சொல்கின்ருர். கூத்தின் அற்புதம் தன்னில் அவர் இல்லாதிருந்தால் தான் காணமுடியாது என்றதால் காட்டியது காட்சி மூலம் எனச் சிதம்பரத்தைப் போற் றியவாறு இது சிதம்பரத்தின் அருள் நிறைந்த புனிதத்தின்பேறு உணர் த்தப்பட்டது: நெஞ்சம் தூய்மை இலாவகை இக்கூத்து காண்டற்கரியது நெஞ்சத்தூய்மையைத் தந்தது தம் உழவாரத் தொண்டு ஆகும்.

படைக்கல மாகஉன் நாமத் தெழுத்து ஐஞ்சுஎன் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்உனக் காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக் கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே-

இனி எனக்கு எத்தீங்கிலும் என்படைக் கலமாக உனது நாமமான ஐந்து எழுத்து எனது நாவில் ஓதிக் கொண்டேன். இதனுல் எப்பகை க்கும நான் இடைந்து எக்காலமும் துயருறப் போறவன் அன்று. துயரம் எனக்கில்லை! என் ஏழு பிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன். ஐயா என்னை வேண்டாமென்று துடைத்து உருட்டித்தள்ளினுலும் நான் போகேன்! உன்னைத் தொழுது வணங்கித் தூய நீறணிந்து உன் அடை க்கலம் கண்டாய் அழகிய தில்லை அம்பலத்து சிவனே!

நேராகத் கூத்தைக் காண்கின்ருர். கண்டபின் தெளிவு பிறக்கின் றது. இதை விட மேலான எப்பொருளும் இலை என்பது துணிவாகியது. கூத்தை நிகழ்த்துவது ஐந்தெழுத்து என்பது தெளிவு பெற்ற பின் இந்த நாமத்தின் உச்சரிப்பு எல்லாப் பகையையும் வெல்லும் பெரும் பனட யாகின்றது. ஆதலால் அந்த நாமமே படைக்கலாமாவது. அதை உறுதி படச் சொல்லலால் வாழ்வில் ஏற்படும் எத்தீங்கையும் அறுத் திடும் வகை நின்றது. ஆதலின் இடைக்கலமாக எதற்கும் இடையப் போறவன் அல்லேன் என்கின்ருர்.

அடித்து அங்கு தோன்றிய இன்பம் பெரிதாதலின் இதைவிட்டு நீ ஒடு என அடித்து துரத்தினுலோ அல்லது தும்புக்கட்டால் துடைத்தெ றிந்தாலோ நான் போகேன் என வைராக்கியம் கொள்கின்ருர். நீ செய்வதைச் செய் நான் உன்னை விட்டுப் போகேன். நான் இங்கு வேறொரு பிரளியும் செய்யேன் உன்னைக் கும்பிடுவேன் தூய வெண் ணீறு அணிவேன். இது இரண்டுமே செய்து நிற்பேன், நான் உன் அடைக்கலம் என்னைக் கைவிடாதே இதைக் கண்டு கொள் என்கின்ருர்.

அடைக்கலம் புகுந்தாரை இவரால் நமக்கு ஆபத்து என்று கைவி டல் முறையன்று என்பதை குறிப்பிடுகின்ருர். ஏசிக் கலைத்தல் தகாது சர்வவல்லமை உடைய உனக்கு இது முறையன்று என ஈசன் மேல் கொண்ட ஆர்வம் அவரை இவ்வண்ணம் பாட வைக்கின்றது.

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீறு அணிந்து புரிசடைகள்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்கவேடச்
சின்னத்தி னல்மலி தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்அத்தன் ஆடல்கண்டு இன்புற்ற தாலிவ் விருநிலமே.

பொன்னை ஒத்த மேனிமேல் வெள்ளை நீறு [illegible] உடைய சின்னங்களால் சிறப்புற மலிந்த தில்லையுள் சிற்ற புன்சடைகள் மின்னலைப் போன்று இலங்க [illegible] பலி [illegible] திருக் கூத்தை நிகழ்த்திடும் என் அத்தனுடைய திருஆடலைக் எங்குற்றது என தெரிந்து திரிந்து உழன்று வீதி உலாவும் பிச்சாண்டி கண்டு இப்பூமி இன்புற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூமிக்கு இன்பம் எதுவாயது என்றால் சிதம்பரக் கூத்தே எனச் சொல்கின்றார். அதுவே நிலை உடைய இன்பம். அக் கூத்து பிச்சைக்கு இச்சித்த பெரும் துறவின் உயர் நிலையால் மலிந்தது. ஆனால் உலக ருள் காரணமாக அம்மையுடன் நின்றருளும் காட்சி பொலிவது அவள் அருளே மூலமாக காணப்பெறலாலும் அதன் நோக்கம் பலிதேர்ந்து உழலும் சின்னங்கள் பொலிதலாலும் காண்பார்க்கு தவத்தின் உறுதியே சொல்லப்படுவது. தவம் செய்வார்க்கு அது காண்பிக்கப் படும் என்றதாதலின் சுரிகுழலாள் படி கொண்ட பாகமும் அப்பெருமாட்டிக் கருளிய திருக்கூத்து பிச்சைக்கே இச்சித்தது என்ற குறியும் கோலமும் பேசப்படுகின்றது.

இவற்றை தாம் தாம் செய்யும் தவத்தின் பேற்றால் உணரலாம் அன்றி பின்னர் வேறு வழி இல்லாமையின் விடங்கவேடம் என்றார்: விடங்கவேடம் என்றது பிச்சைக்குரிய தவக்கோலம்.

இவ்வாறான நிலையில் நிற்பானின் திருக்கூத்தைக் கண்டே இவ்வுலகம் இன்புற்றது. இன்பம் அதுவே தான் என்கின்றார். இரை தேடி பெரும் இரைக்காக காத்திருந்து தூங்கி இருக்கும் கொக்கைப் போல் நான் ன் அருள் நோக்கி நின்று அலுத்தேன் எனக் கூறுகிறார் மாணிக்கவாசகர். 9

சாட எடுத்து தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான் முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன் றேநம்மை ஆட்கொண்டதே.

அடித்திட வேண்டு மென்று தூக்கி எடுத்தது சிவனை நிந்தித்து தக்கன் செய்த யாகத்தில் அவி உண்ணப் போயிருந்த சந்திரனை! கொன்றிடும் படி தூக்கி எடுத்தது மார்க்கண்டனைக் கொல்லும் படி வந்த இயமனை! அதுவன்றி நாராயணக் கடவுளும் பிரமனும் தேடும்படி நீண்ட சோதியாகி ஓங்கி நிமிர்ந்தது, இவை எல்லாம் செய்தது தில்லையுள் சிதம்பரத்து பொன்னின் சபையில் நின்று ஆடிட எடுத்த பாதம் அது தான் அன்று நம்மை உய்யும் மடி ஆட்கொண்ட குருமூர்த்தமாகும்.

தில்லையம்பலத்துக் கூத்து தொடக்கம் முடிவு என்பதிலாதது. எல்லாம் வல்லது. என்றும் உள்ளது, என்னைக் கருணையால் ஆட்கொண்டது என்கின்றார், 10

# செந்நெறியில் நின்ற சிவன் அடியார்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை

இதனை வலி உறுத்திச் சொல்கின்றார் திருநாவுக்கரசர். மேலே தந்த பதிகமுடன் மெய்யடியார்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை என அவர் பாடியருளிய இன்னுமொரு திருப்பதிகம் இதன் கீழ் தருகின்றோம்,

உண்மை அன்பு அகிம்சை இதுவே மெய் அடியாரின் கொள்கைகள். இவை இலாதார் சைவம் பேசிப் பிரயோசனமில்லை. இவையிலாதாரை நாம் சைவர் என்று சொல்லப் போறவர் அன்று! அரசியல் வேறு சமயக் கோட்பாடு வேறு. சமயவாதகளும் வேறு என்றே இன்று சொல்வோம். அவர்கள் சமய வியாபாரிகள். சைவத்நின் உயர்ந்த நிலையில் தான் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் நின்றனர். அவர் வழியை எடுத்துக் காட்டல் என் பணி. அத்துடன் அவர் வழிக்கு புறம்பான செயலையும் நடத்தையையும் போதனையையும் கண்டித்து செய்தி தருவது இன்னும் முக்கியமான பணியாகின்றது.

முன்னது சுலபம் பின்னது சிரமம். எனினும் எமது சைவ மக்கள் உண்மையைத் தாமாகத் தெளிய தக்கநிது தகாதது இதுவெனக் காட்டலில் யாரும் என்மீது குறைகாண முடியாது. நாம் தவறு எனக் காண்பிப்பதை தவறு இல்லை என யாரும் எடுத்துப் பேசலாம்,

ஆனால் அதுவன்றி என்னை சொற்பொழிவிலும் பிரசங்கத்திலும் வில்லிசையிலும் வைத்து அவமானப்படுத்தலை அல்லது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலார் தாம் பழகிக் கொண்ட வன் செயல் மூலம் தண்டிக்க முயல்வதை நாம் பொருட்படுத்தப் போவதில்லை. பொய் தவம் பேணுவார் செயல் பற்றியும் அவர் புறனுரை பற்றியும் ஏதும் கொள்ளோம் ஏதும் எண்ணோம். எமது நாதாக்கள் காண்பிக்கும் அறவழியில் நாம் செல்வோம்.

பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன் நாமம் நவிலவே

புண்ணியம் பூரித்து ஓங்கி வரும். பொய் கெடும். கூர்மையான அறிவு கைகூடிடும். சீருடைய பெரியோர்கள் வாழும் திருச்சேறை என்னும் தலத்தில் செந்நெறி என்னும் அருள் வழியில் எழுந்தருளிய பெண் ஒருபாகமாய சிவன் திருநாமம் வாயால் சொல்லிடவே.

இங்கு சிவநாமம் ஓதலின் பயன் தெரிவிக்கின்றார், ஓதுதலே புண்ணியம் பெருக்கும், தீதினை அகற்றும். அதுவன்றி கூர்மையான அறிவை கைகூடப்பண்ணும். இதை ஒரு புறமாக்கி ஒழுங்காக நடக்கத் தெரியாது பிரசங்கம் வைத்து திருவிழாச் செய்து மேடைவைத்து கூத்தாடி கோமாளிப் பாட்டுப் பாடும் பேதை யாழ்ப்பாணத்தாரே நீர் தேர்கட்டி கோயில்கட்டி கோபுரம் கட்டி கொடும்பாவி இழுத்தமாதிரி பேதையரை ஊர்வலம் இழுத்தும் பயனில்லை என்பது என்று உணர்வீர்கள்! மந்த புத்தி உடைய மனிதரே எது சரி எது பிழை என நாலுநாள் ஆதல் ஒழுங்காய் இருந்து நீங்கள் ஓதுங்கோ! தெளிவு வரும் வந்தபின் சிந்தியுங்கோ.

சிவநாமம் சொல்லித் தெளியோமோ என்கின்றார் யோகசுவாமிகள் 1

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு போதிநம் பால்வந்து வைகவே.

என்ன பெரும் தவத்தை என் நெஞ்சமே நீ செய்து விட்டாய்! மின்னல் போல் மிளிர வார்ந்து தூங்கும் சடைஉடைய வேதத்தின் விழுப்பொருளாய கடவுள் சிவன் (அறிவு சொரூபம்) செந்நெல் விளைந்து முதிர்ந்து நின்று விளங்கும் திருச்சேறை என்னும் தலத்து செந்நெறியில் பொருந்தி இருக்கும் அறிவின் ஞானமாய அக்கடவுள்என்னிடம் வந்து இருந்தருள,

போதி – என்பது ஞானம், கோயிலில் இருப்ப[illegible] தன்னிடம் புகுந்த அற்புதம் அதிசயமாகிறது திருநாவுக்கரசர்க்கு! அதலால் என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே என்கின்றார்: வேதம் சொல்லும் விழுப்பொருள் ஞானமயம். சுட்டு இறந்த ஞானமயம் என்பர் பெரியோர். 2

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

பிறத்தல் பின்னர் வயது வந்து மூத்தல் பெரும் பசி மேலான கொடிய நோய் மரணம் இவை நீங்கி இன்பம் தானாக வந்து சேர்ந்திடும் சிறப்படையலாம். திருச் சேறை என்னும் தலத்து செந்நெறி என்னும் அருள் விளக்கத்தில் இருக்கும் பெருமான் திருவடிகளை மறப்பதில்லாமல் மனத்தில் உள்ளாக வைத்திருந்திட

திருச்சேறை அமர்ந்த சிவன் திருவடி தியானித்தல் பிறப்பு மூப்பு மரணம்பசி நோய் என்னும் இவைநீங்கி இன்பம் தழைத்திருக்க வைகையாகும் என்றது உபதேசமாகின்றது, 3

மாடு தேடி மயக்கினில் விழ்ந்துநீர்
ஓடி யெய்த்தும் பயனிலை ஊமர்காள்
சேடர் வாழ்சேறைச் செந்நெறி மேவிய
ஆட லான்தன் அடியடைந் துய்ம்மினே.

மாடு வாகனம் வீடு வாய்த்தல் இவை தேடி இதன் மயக்கில் வீழ்ந்து நீர் ஓடிக் களைத்தும் பயன் இல்லை ஊமைகளே நாம் சொல்வதைக் கேளுங்கள்; பெரியோர்கள் வாழும் திருச்சேறை என்னும் தலத்து அருள் நெறியில் இருந்தருளும் திருநடனம் ஆடுவான் திருவடிகளைச் சேர்ந்து உய்யுங்கள்.

எல்லாவற்றையும் இயக்கி நிற்கும் ஒருவன் அவனே ஆதலின் ஆடலான் என்றார். ஆடுவான் அவனை அடைந்தால் உய்தி அதேயாகின்றது; சேடர் என்றது துரிய நிலை கைவந்த பெரியோர் என்றதாகும். ஊமர் என்றது கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தெரியாதீர் என்றதாகும்; ஓடியாடி பொருள் தேடிக்களைப்பீர் பயன் என்ன என்றால் அதற்குபதில் சொல்லத் தெரியாதவர் என்ற குறிப்பாகும்; மாடு பொருள் செல்வம் மயக்கம் செய்வன. அதன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளல் அரிதாகும், உய்தல் என்பது தான் பிறப்பு இறப்பு இவை நீங்கல் என்றதாகும். 4

எண்ணி நாளும் எரியயிற் கூற்றுவன்
துண்ணென் தோன்றில் துரக்கும்வழிகண்டேன்
திண்ணன் சேறைத் திருச்செந் நெறியுறை
அண்ண லாருளர் அஞ்சுவ தென்னுக்கே.

என் வாள் நாளை எண்ணி அது முடிவாதலும் நெருப்பினைப் போன்ற சூல வேல் உடைய இயமன் திடீரெனத் தோன்றில் அவனை அப்பால் ஓடுஎனக் கலைத்திடும் வழி கண்டு கொண்டேன். எப்படி எனில் திண்மை உடையவன் திருச்சேறை என்னும் தலத்து திருவுடைய செந்நெறியில் வாழும் அண்ணல சிவன் உண்டு. பின்னர் பயப்படுது எதற்காகும்.

திருச்சேறையில் உள்ள சிவன் உண்டு அச்சமில்லை எனக்கூறியவாறு உண்மையான வழிபாட்டில் நிற்பார் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை; இயமனை அறியாது உயிர் போகாது என்பது உலக வழக்க மொழி. எந்தக் கொடிய கொலைக்கும் காலகத் தூண்டுபவன் இயமன். ஆதலால் அவன் எங்களை தன் அலுவல் மூலம் நோயாகவோ மிருத்தாகவோ கொலையாகவோ நடத்திட எத்தனித்து எப்போது இதைச் செய்யலாம்என நினைப்பான். அப்படியான ஒரு நாளைக் அவன் கணக்கிட்டுக் கொண்டு வரவே போறான் அது நிச்சயம்! அப்படியாக அவன் வந்தால் அவனை கலைக் கின்ற வழி கண்டேன். அது யாதெனில் இங்கு பார் உன்னைஒரு உதையில் கொன்றவர் பக்கத்தில் இருக்கிறார் என்று சொல்ல ஐயோ நான் போறேன் எனப் பயந் தோடுவான், அதுதான் வழி! அதனைக் [illegible]டு துரக்கும் வழி கண்டேன் என்கின்றார். அந்த ஈசன் திருச்சேறைச் செந் நெறியில் இருந்திட ஏன் பயப்படுவான் என்றதால் அண்ணலாருளர் அஞ்சுவ தெனுக்கே என்கின்றார்; 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பி வானந் தரணிகம் பிக்கிலேன்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னுருளர் அஞ்சுவ தென்னுக்கே.

இந்தப் பூமி ஒழுங்காச் சுழல்வது தப்பி வானுலகும் மண்ணுலகும் தப்பித்து பெருங்கேடு விளைந்தால் என்ன! ஒப்பற்ற பெரும் படையுடைய அரசர் என்மேல் சீறிக்கொண்டு வந்து கொலை செய்ய முயன்ருல் என்ன செப்பமாய வாழ்வு உடைய பெரியோர் வாழும திருச்சேறை என்னும் தலத்து செந் நெறி எனும் அருள் வழியில் மேவிய எம் அப்பனுர் இருக்கிருர். அவர் காத்துக் கொள்வார், பார்த்துக் கொள்வார்: ஆகையின் நாம் ஏன் பயப்பட வேண்டும்.

தேவாதி தேவனுய சிவன்திருவடி தஞ்சமாக வாழ்வேனையாரும் இகழட்டும் இகழ்ந்து துயறுத்தட்டும், பூமி சுழல்வது நிற்கட்டும். வானம் இடிந்து விழட்டும். தலை மீது அப்பவோ அணுகுண்டு முதல் பலவும் விழட்டும். அரசர் சீறிக் கொண்டு இந்த இன மக்கள் வேண்டாம் என்று சுட்டுத் தள்ளும்படி படைகளை ஏவட்டும். இதனுல் இவையாவும் வரினும் இவை எல்லாம் வென்று எம்மை காக்கவல்ல செப்பமுடையவன் இருக்கின்ருன்! திருச்சேறையில் செந்நெறி மேவிய சிவன். அவன் இருக்க அஞ்சுவது எதனுக்கே என்கின்ருர்.

செப்பமாம் சேறை என்பது அங்கு வாழும் பெரியோரைக் குறித்தது. அவர்கள் அகிம்சை அன்பு தருமம் தவம் புலன் அடக்கம் சாந்தம் தியானம் பாவனே எனும் எட்டுவகைச் சீலங்களுடன் வாழ்பவர் பச்சழவில் அன்று அன்ருட வாவில் இவற்றைப் பயில்வர். அத்தகைய பெரியோர் வாழும் சேறையில் செந் நெறியில் இருப்பவன் சிவன் அவனும் இவர்களைப் போன்று எண் குணத்தினன். இதனுல் முழுதனுக்கிரகம் செய்யவல்லவன். ஆதலின் அஞ்சுவதென்னுக்கே என்கின்ருர்.

சிவன் கொலை கொடுமை முதல் பழியிலாத கடவுள். ஆதலின் அவனைத் தஞ்சமாகக் கொள்ளலாம் அஞ்ச வேண்டிய தில்லை என்கின்ருர் 6

வைத்த மாடும் மடந்தைநல் லார்களும்
ஒத்தொவ் வாதவுற் ருர்களு மென்செய்வார்
சித்தர் சேறைத் திருச்செந் நெறியுறை
அத்தர் தாமுளர் அஞ்சுவ தென்னுக்கே.

பிரயாணம் முதலியவற்றிக்கு தேள்வை என வைத்த மாடும்[இன்று கார் முதலியன] இன்பத்துறைக்கும் உலாப் போவதற்கும் வேறு வேறு கருமங்கட்கும் நீர் தேடிக் கொண்ட அழசிய பெண்களும் உம்முடன் ஒத்தும் வெறுத்தும் வாழ்கின்ற சுற்றமும் நண்பரும் எமக்கு என்செய்து நற்பயன் தரவல்லார்கள். இவர்களால் துயரம் வந்தபோது ஏதும் பிரயோசனம் வராது. ஆனுல் சித்திகள் பல எய்திய பெரியோர் வாழும் திருச் சேறையில் திருவுடைய செந் நெறியில் இருக்கும் எம் கடவுள் சிவன் உளர்! ஆகையால் எதற்குப் பயப்பட வேண்டும்.

பெரியோர் தமது நல் ஒழுக்கத்தால் சித்திகள் பல பெறுவர். கட்டுப் பாடான வாழ்வு தானே கித்திகளைத் தருவிக்கும். சிவனை வழிபடுவார் எட்டுவகைச் சித்தியும் பெறுவார். இங்கு திருச் சேறையில் வாழும் பெரியேர் வரலாறு உரைத்தபடி; 7

குலங்க ளென்செய்வ குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னுருளர் அஞ்சுவ தென்னுக்கே.

நல்குலத்தில் உதித்தேன் என்ற பெருமை என்ன செய்யும்; எங்கள் கொள்கைகளை எதிர்ப்பாரை அடித்து அடக்கி சுட்டுக் கொன்று திசை புகழ இருந்து இறுமாப்புடன் வாழ்கின்ற மக்கள் செய்யும் குற்றங்கள் தானும் என்ன செய்யும்? பெரும் குலத்தோரும் கொலையாளரும் செய்யும் செயல்களைக்கண்டு மநஞ்சே நீ நடுங்கி சோரதே பயந்து கொள்ளாதே உலகிற்கு; ஒளியாய் இலங்கும் திருச்சேறை என்னும் தலத்து செந்நெறியில் மேவிய தேவாதி தேவன் சிவன் இருககின்ருர் நாம் ஏன் பயப்பட வேண்டும்.

குலங்களின் தலைமைப் பாட்டால் கொடும் செயலின் முனைப்பால் வரும் குற்றச் செய்களால் எம்மை யாரும் ஏதும் செய்யலாம் என அஞ்ச வேண்டிய தில்லை. குலங்கள் என்றது அந்தணர் முதல் உயர்ந்த குலத்தைக் குறிப்பது, அவர் சாபம் செய்யினே சூனியம் நம்மை எய்தாது என்றபடி. அடுத்து அரசியல் காறரின் பலாத் காரக் குற்றங்களும் எம்மையாதும் செய்ய முடியாது என்றதை குற்றங்கள் என் செய்ய என்ருர். 8

பழகி னுல்வரும் பண்டுள சுற்றமும்
விழவி டாவிடில் வேண்டிய எய்தொணு
திகழ்கொள் சேறையிற் செந்நெறி மேவிய
அழக னுருளர் அஞ்சுவ தென்னுக்கே.

பழக்கத்தால் அண்ணன் தம்பி மாமன் மச்சான் என்றபடி வருகின்ற முன்பிருந்துள்ள இந்த சுற்றங்களை நீக்கிக் கொண்டால் அன்றி நாம் வேண்டியதை அடைய முடியாது? சிறப்பினுல் திகழ்ந்து கொள்ளும் திருச்சேறை என்னும் தலத்து செந் நெறியில் மேவிய அருளின் அழகுடைய சிவன் இருக்கிருன் அஞ்சுவது எதற்கு?

தந்தை தாய் தமர் தாரம் என்ற பந்த பாசங்களில் பிசங்கி நிற்கும் துணையும் நாம் விரும்பிய அருட்பேற்றை அடைய முடியாதெனினும் அப்படியே நடந்திட முடியாமை பற்றி நாம் பயப்படத் தேள்வை இல்லை. எனெனில் சிவன் இருக்கிருன். அவன் தொண்டால் உய்யலாம் என்றது குறிப்பு! உண்மை நின்ற சிவனடியார் பற்றினை நீக்காதுவாழ்தலால் உண்மை ஒளியைப் பெற முடியாது எனஅஞ்ச வேண்டியதில்லை. 9

பொருந்து நீண்மலை யைப்பிடித் தேந்தினுன்
வருந்த வூன்றி மலரடி வாங்கினுன்
திருந்து சேறையிற் செந்நெறி மேவியங்(கு)
இருந்த சோதியென் பார்க்கிட ரில்லையே.

தன் ஆணவத்திற்கு ஏற்ப தான் சென்ற வழியில் குறுக்கே வந்து நீண்ட கைலை மலையை இருகையாலும் தூக்கி எடுத்து ஏந்திய இராவணனை வருத்தும் படி ஊன்றிய திருப்பாதத்தை இராவணன் இகைகேட்டு இரங்கி நெரித்தலை விட்டு நீங்கிய திருத்த முடைய திருச்சேறை என்னும் தலத்து செந் நெறியில் மேவி அங்கு இருந்தருளும் சோதியே சிவனே எனச் சொல்லிப் போற்றுவார்க்கு இடர் என்பது இல்லை: 1

# துர்க்கைகோயிலார் வன்முறைகள்நீங்கி வழியில்வந்து பதில்தந்துள்ளனர்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெற்ற சில செயல்களையும் சைவதருமத்திற்கும் நீதிக்கும் முரணுன பணம் வசூலிப்பு முறைகளையும் பற்றிய செய்திகளை எனது பத்திரிகை மூலம் வெளிப்படுத்தினேன்.

அவைகள் பொய் எனவும் புனைந்துரைத்த செய்திகள் எனவும் துர்க்கை கோவிலிலும் பிற கோவில் பிரசங்கங்களிலும் வில் இசையிலும் நம்மை அவதூறுன வார்த்தைகளால் கேலி செய்தனர். அபசாரம் மிகுந்த சொற்களை என் நடத்தை பற்றிச் சொல்லினர்.

நாம் ஓர் சைவர் அல்ல கத்தோலிக்கர் என்றும் பேசினுர்கள். இப்பேச்சுக்கள் கோவில் சந்நிதானங்களில் பேசினுர்கள். இதைவிட நான் தரம் குறைந்த வகையாக பத்திரிகை நடத்துகின்றேன் என தமிழர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடித மூலம் தெரிவித்தார்.

அதுவன்றி தெல்லிப்பழைச் சந்தியில் வைத்து வன்செயல் புரிந்து துர்க்கை கோயிலார் என்னைப் பெரும் அவமானத்துள்ளாக்கினர். அன்று காங்கேசன்துறையைச் சேர்ந்த இளைஞர் அவ்வழியால் வந்தவர் தடுத்திராவிட்டால் என் உடலிற்கு தீங்கு நேரக் கூடிய அபாயமும் இருந்தது. அதுவன்றி தெல்லிப்பழையைச் சேர்ந்த பல பிரபல உத்தியோகத்தர் துர்க்கை கோவிலைப் பற்றி எழுத வேண்டாம் எழுதினுல் பாரதூரமான செயல்கள் விளையக் கூடும் என எச்சரித்தனர்.

ஆனதினுல் நாம் ஏதும் ஆதாரமிலாத செய்திகளை வெளியிடவில்லை, நாம வெளியிட்ட செய்திகள் அங்கு நிகழ்ந்துள்ளதாக தர்மகர்த்தா சபைக்கு அந்த ஊர் மக்கள் ஓர் மகஜரில் தெரிவித்துள்ளதை நம் செய்திக்கு ஆதாரமாகக் காண்பிக்க தெல்லிப்பழை மக்கள் துர்க்கை கோயில் தர்மகர்த்தா சபைக்கு சென்ற ஆண்டு விண்ணப்பித்துக் கொண்ட மகஜரின் நிழழ் படப் பிரதி ஒன்றை சென்ற 29 6 79 இதழில் வெளியிட்டிருந்தேன். அதை வெளியிட்ட பின் துர்க்கை கோயில் தாமகர்த்தா சபை ஓர் பதிலை நமக்கு அனுப்பி இருக்கின்றது

இதுகாறும் நான் போகும் வழியில் நின்று வழி மறித்து வன் செயல் செய்து அவமானப்படுத்தாவல[illegible] ப்பியமைக்கு நன்றியறிதலுடன் அவர்கள் [illegible] படி அந்தக் கடிதம் வாசகர் பார்வைக்கு கீழே தரப்படுகின்றது.

துர்க்காதேவி ஆலயம் தெல்லிப்பழை

தர்மகர்த்தா சபை

21-7-1979

கௌரவ ஆசிரியர் அவர்கள்:
''சந்திரதீபம்''
கொக்குவில் மேற்கு
கொக்குவில்
அன்புடையீர்,

தங்களால் 29 6 79 வெளியிட்ட சந்திரதீபப் பத்திரிகையில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தர்மகர்த்தர் சபைக்கு சுமார் எட்டு மாதங்களுக்கு முன் 20 10 78 திகதி கொண்ட திரு. தி. ஆறுமுகசுவாமி திரு. ஆ கனகசபை ஆகியோர் உட்பட இருபத்திரண்டு பேர் கையொப்பமிட்டு சமர்பிக்கப் பட்ட மகஜர் வெளிவந்தது எங்களுக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

இம் மகஜர் உங்கள் கைக்கு எப்படி கிடைத்தது என்று எங்களால் விளங்க முடியாமல் இருக்கிறது.

இம் மகஜர் எங்களுக்குத் கிடைத்த அதே தினமே 22 10 78 ல் எங்களால் பரிசீலனை செய்யப் பட்டு அம் மகஜரில் கூறியிருக்கும் குற்றச் சாட்டுக்கள் அத்தனையும் ஆதாரமற்றவை என்றும் இம்மகஜரை ஒட்டி மேலும் எது வித நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை என்றும் தீர்மானிக்கப் பட்டது. நிற்க நீங்கள் ஆலயத்தின் வளர்ச்சியிலோ அல்லது பொது மக்களின் நலன் கருதியோ இந்த மகஜரை வெளியிட விரும்பின் தர்மகர்த்தா சபையை விசாரித்து உண்மையை அறிய முயற்சித்திருப்பீர்கள். இவ்விதம் செய்யாது திடீரென்று இம் மகஜரை வெளியிட்டது உங்கள் நல் லெண்ணத்தில் எங்களுக்கு சந்தேகம் உண்டாக்குகிறது.

ஏதோ அபச குணங்கள் நிகழ்ந்ததாக அம் மகஜரில் குறிப்பிடப் பட்டிருந்து. ஆனுல் தொடர்ந்து நடைபெறும் ஆலய வளர்ச்சியும் அடியார்கள் பெற்றிருக்கும் துர்க்கையின் அனுக்கிரகத்தையும் ஒத்து நோக்கும் பொழுது அவற்றை அபச குனங்களாகக் கருத முடியாது.

ஆலயக் கணக்கு விபரங்கள் பற்றி எந்த விதமான குறிப்பிட்ட குற்றச் சாட்டும் கொண்டு வரப் படாமல் மேலெழுந்த வாரியாகச் சில வினுக்களை எழுப்பியது மகஜரின் விஷம நோக்கத்தையே காட்டுகிறது. இது வரையில் எந்த ஒரு அடியாரும் தாம் கொடுத்த பணமோ பொருட்களோ ஆலய கணக்கில் சேர்க்கப் படவில்லையென்று முறையிட வில்லை. வருடா வருடம் வரவு செலவு அறிக்கை வெளியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப் படுகிறது. யாழ்ப்பாணத்தில் பல பெருங்கோயில்கள் ஆலயக் கணக்குகள் வைக்கும் முறையை எங்களிடமிருந்து அறிந்து பின்பற்றுகிறார்கள்.

நீங்கள் இவ் விடயத்தில் நடு நிலைமை வகுப்பீர்கள் என்று நம்புகிறோம். எனவே மசஜருக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து தங்கள் பத்திரிகையில் பிரசுரித்தீர்களோ அதே அளவு முக்கியத்துவம் கொடுத்து இக்கடிதத்தைப் பிரசுரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்

பிரதி, திரு. தி. ஆறுமுகசாமி
மகஜா முதல் கையொப்பக்காரர்,

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
க.சிவவாகீசர்.
காரியதரசி

# திருக்கேதீச்சர நிர்வாகத்தின் அதிகாரப்போக்கை கண்டுஅடியார்கள் கவலை

## யாழ்ப்பாணம் திவ்வியஜீவன சங்கம்

1979 7 26

ஆசிரியர் சந்திரதீபம்

ஐயா!

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவநாம பஜனையை தடை செய்ததைப் பற்றி வருத்தமும், கௌரவ செயலாளரின் பதிலை வாசித்து ஏமாற்றமும் அடைநதோம். வழிபாடு செய்ய வருபவர் எவரையும் நிற்பாட்ட திருப்பணிச் சபையாருக்கோ, எவருக்கோ உரிமையில்லை.

சிவநாமத்திற்கு நிகண்டில் 99 நாமங்கள் கொடுத்திருக்கின்றது. அடியார்கள் எந்த நாமத்தைச் சொல்லியும் தங்கள் வழிபாட்டை நடாத்தலாம. "ஆயிரம் திருநாமம் சொல்லி தென்னேணம் கொட்டாமோ" என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளினார்கள். மற்றும் திருமுறைகளிலும், போதிய ஆதாரம் இருக்கின்றது. இக்கலியுகத்தில் நாமபஜனை ஒன்றாலே இறைவன் திருவடிகளை அடையலாம் என வேத ரிஷிகளும் பல மகான்களும் கூறியும், அவ்வணமே நாமபஜனை செய்து, பல பக்தர்கள் அனுபூதியடைந்திருக்கின்றார்கள்.

திருஐந்தெழுத்தை பாடுவது குற்றம் எனக் கருதும், கௌரவ செயலாளர், குருவால் உபதேசம் செய்ய வேண்டிய மந்திரங்களை பததிரிகையில் பகிரங்கமாக பிரசுரிதது விளக்கம் கொடுப்பது பேதமை.

ஆலயத் திருப்பணிச்சபை இனிமேலும், இவ்வித செயல்களை நடத்தாத வண்ணம் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இங்கனம் தங்கள் உண்மையுள்ள
சி கனகரத்தினம்
(தலைவர்),
(அரசாங்க சட்டத்தரணி)

சிவஸ்தான்
நல்லூர்

## இளைப்பாறிய புகைவண்டித் திணைக்கள மாவட்ட அதிபர் தெரிவிப்பது

ஆசிரியர்
சந்திரதீபம்
கொக்குவில்:

பாடிப் பரவுவதற்கும் தடையா?
ஆங்கிலத்தில் கட்டளையா?

8.6.79ல் வெளிவந்த தீபத்தில் கோவிலில் ஆங்கிலத்தில் கட்டளை என்ற செய்தியை வாசித்து ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்த பலருள் நானும் ஒருவன். தேவார காலத்துக் முற்பட்டதும் வாயாரத் தொண்டர்களால் துதி செய்யப் பட்டது மாகிய கேதீச்சரநாதன் ஆலயத்தில் இவ்விதமான சம்பவம் ஒன்று நிகழ்ந்திருக்குமோ என்ற ஐயமே ஏற்பட்டது. ஆனல் 29.6.79 ல் வெளிவநத கடிதம் முன் வெளிவந்த செய்தியில் ஏதோ உண்மை இருப்பதாகக் குறிப்பாக விளக்குகிறது. சைவத்தைப் பேணிக் காக்க வேண்டிய கேதீச்சுர ஆலய திருப்பணிச் சபையின் சார்பாகச் சபையின் கௌரவ செயலாளர் திரு.இ. நமசிவாயம் பஞ்சாட் சரத்தையே தமது பெயராகக் கொண்ட திரு நமசிவாயம் பஞ்சாட்சரம் பற்றிச் சைவர்களுக்கு விளக்குகிறார். பஞ்சாட்சர மகிமை சைவ உலகெங்கும் பரவச் செய்வதற்குப் திருப்பணிச் சபை எடுத்த முயற்சி போற்றப் பட வேண்டியதே. ஆனல் 8 6 79ல் வெளிவந்த செய்தி யாதென்பதை விளங்காமல் பொருத்தமற்ற எதையோ எழுதிச் சபையின் கௌரவத்தை காப்பாற்று வதற்கு முயல்வது வருந்தக் தக்கது.

திருக் கோவில்களில் பன்னிரு திருமுறைகள் மட்டுந்தானா ஓதப்படலாம். சிவநாமங்களை ஓதுதல் கூடாதா என்பது வேறு விஷயம். அதைச் சிந்திப்பதற்கு முன் சைவர்கள் பலரைப் பாதிக்கும் 29 9 79ல் வெளிவந்த கடிதம் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது ஏனெனில் கடிதம் திருப்பணிச் சபையின் சார்பாக கௌரவ செயலாளரால் எழுதப் பட்டிருக்கிறது. கடித முடிவு பன்மையில் இருப்பதால் தனி நபர் இந்தக் கடிதத்துக்குப் பொறுப்பாளி அல்லர் ஆகின்றார். திருப்பணிச்சபை இந்தக் கடிதத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்பதாயின் முன் துறவிக்கு ஆங்கிலத்தில் இடப்பட்ட கட்டளைக்கும் பொறுப்பு உடையவர்கள் திருப்பணிச் சபையினரே என்பதை மறுக்க முடியாது. திருப்பணிச் சபை இந்தப் பொறுப்பை ஏற்காவிடின் அதற்கு ஆனபரிகாரத்தை தேடித் திருப்பணிச் சபைக்கு இழுக்கவராது காப்பாற்ற வேண்டியது திருப்பணிச் சபையின் தலையான கடமையாகும். வேலியே பயிரை மேய்ந்தால் ஆவது என்னவாகும் என்பதைத் திருப்பணிச்சபையில் உள்ளவர்கள் ஒவ்வொரு வரும் சிந்திக்க வேண்டிய அதி முக்கியமான விஷயமாகும்,

திருப்பணிச்சபை மேற் கூறப்பட்ட இருசெயல்களுக்கும் பொறுப்பு உடையதாயின் கீட்காணும் வினக்களுக்கு விடை காணுதல் எமது பொறுப்பாகும்.

### வினக்கள்.

1 திருக்கேதீச்சரநாதன் திருக்கோவிலில் திருமுறைகள் அல்லாத துதிப் பாடல்களையும் சிவநாமங்களையும் ஓதுதல் கூடாது என்னும்தீர்மானம் உங்கள் சபையில் என்று நிறை வேற்றப் பட்டது?

2 அவ்விதமான ஓர் தீர்மானத்தை நீங்கள் நிறை வேற்றி யிருந்தால் அது பற்றிய அறிவித்தலை பக்தர்களுக்கு அறிய[illegible] ணம் என்ன?

3 அவ்வித அறிவித்தலை நீங்கள் வெளியிட்டிருந்தால் நடமாடும் தெய்மாகிய துறவி அவ்வாணைக்குக் கட்டுப் பட்டிருப் பாரல்லவா?

4 அறிவித்தல் இல்லாத காரணத்தினல் சபைக்கும் இந்தப் பெரும் இழுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்கிறீர்களா?

5. 29 6 79ல் சந்திரதீபத்தில் வெளிவந்த கட்டுரை சபையின் அனுமதி பெற்றதா? அங்கிகாரம் பெற்றிருந்தால் அந்தக் கூட்ட அறிக்கையைச் சைவ மக்கள் அறியத் தருவீர்களா?

6 குறிப்பிட்டகடிதமும் முன் இடப்பட்ட ஆணையும் திருப்பணிச்சபையின் அங்கீகாரம் பெறப்படா தவையாயின் சபை எடுக்கும் நடவடிக்கை என்ன? இதிலும் பாரதூரமான செயல் ஒன்று நடை பெறும் வரை தாமதித் திருக்கப் போகிறீர்களா? சபையின் கடமைபுரியவந்த ஊழியர் ஒருவர் அவர் கௌரவ ஊழியராய் இருந்தாலும் தன்னிச்சை படி நடந்து பின் சபையிடம் தஞ்சம் புகுவதை அனுமதிக்கப் போகின்றீர்களா?

7 சபையின் கடிதத் தலைப்புக்களில் தொண்டர் நாள் தொறும் துதிசெய அருள் செய் கேதீச்சர மதுதானே என்ற அருள் வாக்கைப் பொறித் திருக்கிறீர்களே. துதி செய்தல் என்பது திருமுறை ஓதுதல் என்பதையா குறிக்கிறது?

8 திருமுறைகள் தோன்று முன் தோன்றிய கேதீச்சுரநாதன் ஆலயத்தில் திருமுறைகள் தோன்றுவதற்கு முன் துதிசெய்த தொண்டர்கள் அனைவரும் திருமறையா ஓதினர்? இன்று ஆங்கிலம் முதல் இடம்பெறும் ஆலயத்தில் அன்று வடமொழி மட்டுந்தான் இடம் பெற்றிருந்தது என்று கூறப் போகிறீர்களா?

9 பஞ்சாட்சரம் பற்றி அரிய கட்டுரை ஒன்றை எழுதியிருந்தீர்களே நாம் பாடும் திருமுறைகளில் எல்லாம் பஞ்சாட்சரம் வாயாரப் பாடப் படுவதை மறுக்கிறீர்களா?

10 பஞ்சாட்சரம் வரும் தேவார திருவாசகங்களையும் ஓதுதல் கூடாது என்றும் ஏதும் தீர்மானம் எடுத்திருக்கிறீர்களா?

11 உங்கள் கடிதத்தின் முடிவில் இவற்றைத் தங்கள் துறவிகளுக்கு எடுத்துச் சொல்லும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம் எனச் சந்திர தீப ஆசிரியருக்கும் கனிவான கட்டளை ஒன்றை இட்டிருக்கிறீர்களே: துறவி என்பவர் யார்? அவர்களுக்குச் சைவம் கூறும் இலக்கணம் என்ன?

12 நீங்களும் கூறுவதைப் பார்த்தால் சந்திரதீபம் ஆசிரியருக்கு உரித்தான துறவிகள் கூட்டம் வேறு உங்கள் திருப்பணிச் சபைக்கு உரித்தான துறவிகள் கூட்டம் வேறு இருப்பதாக வல்லவா தோன்று கின்றது. அவ்விதம் பல வகைத் துறவிகள் கூட்டம் இருக்கின்றனரா?

13 துறவிகளை இழிவு படுத்தும் நீங்கள் சைவர்களா? திருப்பணிச் சபை என்ற பெயரில் துறவிகளை இழிவு படுத்துவது அழகா?

14 பதவிமோகம் அற்று பதவிமோகத்தால் ஏற்படும் அகங்காரம் அற்று நான் என்று மார் தட்டும் ஆணவம் குறைந்து பித்தர் பைசாசர் போலத்திரியும் துறவிகள் வாயில் இருந்து வரும் துதிகள் அத்தனையும் எம்பெருமான் விருப்புடன் அணியும் அன்பு மாலைகள் என்பதை மறுக்கிறீர்களா? திருமுறைகள் வகுக்கப்படுவதன் முன் ஒருவன் இறைவனைப் 'பித்தன்' என்று அழைத்தானே. பின் அவன் பாடும் பணியை ஏற்றதும் பித்தா என்றே பாடத் தொடங்கினானே. அவன் துறவியில்லையா? உள்ளத்தில் துறவு கொண்ட ஞானியர் பலர் இருக்கின்றனர் அவரை மோக வலையிற் சிக்கிய நாம் அறியோம் என்பதை மறுக்கிறீகளா?

ஆலயவீதி
காங்கேயன்துறை
24–7–79

இங்ஙனம்
க.எரம்பரமூர்த்தி

## மிருசுவில் சமாதிமடம் தெரிவிப்பது

ஆசிரியர் சந்திரதீபம்,

தங்கள் பத்திரிகையில் திருக்கேதீச்சரத்தில் நடை பெற்ற சிவநாம பஜனை நிறுத்தப் பட்டதையும் கௌரவ செயலாளர் பதிலையும் வாசித்து மிகவும் வருந்துனேம்

பதில் ஒன்றும் கூறுமல் ஐந்தெழுத்தின் விளக்கம் கூறப்பட்டுள்ளது ஓர் புதிராக உள்ளது. பஜனையைத் தடுத்தது மகாதோஷம். அதே போன்று குருவால் உபதேசிக்கப் படும் பஞ்சாட்சரத்தை பத்திரிகையில் போடுவது.

பத்தாம் வகுப்பு சமய மாணவர்கள் படிக்கும் திருவருள் பயனிலிருந்து விளக்கம் கொடுப்பது ஏட்டுச் சுரைக்காய் போலாகும். அறவிகளுக்கு விளக்கம் கொடுப்பது கொல்லர் தெருவில் ஊசி விற்பதை ஒக்கு மல்வா?

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள அடியாற்கும் அடியேன்
க,மாரிமுத்து.

## பரமாச்சாரியர் பட்டங் கொடுத்தலைநிறுத்தினரா?

இப்படியான செய்தியை முன்னை நாள் மின் சக்தி நீர்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு.ம.ஸ்ரீகாந்தா அவர்கள் என்னிடம் நேரில் தெரிவித்தார்.

எம் சமய நெறியில் பரவிக்கொண்டு வேக முடன் வரும் அபசாரச் செயலும் கோயில்களில் கூச்சமின்றிய தீய நடத்தைகளையும் எடுத்துப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது தவறுகளைக் கண்டிக்க வேண்டியவர்கள் தவறு செய்வார்க்கு பட்டம் கொடுத்து பாராட்டும் முறை பற்றிப் பேசும் போது நல்லூர் ஆதினத்தைச் சேர்ந்த பரமச்சாரிய சுவாமிகள்இப்பொழுது அப்படி செய்வதில்லை எனகூறினர். எமக்கு அந்தவார்த்தைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியாகஇருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரத்தில் சிவநாமம் சொல்ல தடுக்கப்பட்டவர் தரும் பதில்

திருக்கேதீஸ்வரத்தில் யோக சுவாமிகள் பாடியருளிய ''அன்பர்தம் சிந்தையில் உறைவோனே அரகர சிவ சிவ மறையோனே'' என வரும் பாடலை பாடிப் பஜனை செய்யப் போன ஒரு துறவியை ஆங்கிலத்தில் அப்படிச் செய்யக் கூடாது எனத் தடுக்கப்பட்டமை குறித்து திருக்கேதீச்சர நாதனைத் துதி செய்து பாடும் தொண்டர் கூட்டத்து சிலர் நேரில் நம்மிடம் தெரிவித்த கவலையை எம்பத்திரிகையில் கோவிலில் ஆங்கிலத்தல் கட்டளை என்ற தலைப்பின் கீழ் வெளியிட்டிருந்தோம். அதற்குரிய விளக்கத்தை திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை சைவ உலகிற்கு தெரிவித்தால் நன்று என தெரிவித்தோம். அதற்கு இணங்க திருக்கேதீச்சரம் தம் பதிலைக் கண்ணியமுடன் தந்தது நாமும் அதைச் சென்ற சுடரில் வெளியிட்டோம்.

இப்பொழுது அப்பதிலைக் கண்டு அவை சரியான பதில் அல்ல என பலர் கருதுகிறார்கள். என்னிடம் நேரில் இதைத்தெரிவித்துக் கொண்டனர். அதுவன்றி அப்பஜனையை சிலர் வேண்டுகோளின் படி அங்கு நடத்திடச் சென்ற ஜோதி சுவாமிகள் [காங்கேசன் துறவி] தமக்கு அங்கு நிகழ்ந்தவை பற்றி தாமே எமக்கு அனுப்பிய கடிதமூலம் தெரிவிக்கின்றார்.

''ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே சூழ்க இவ்வையகமும் துயர் தீர்கவே'' என ஞானசம்பந்தப் பெருமான் பாடியருள அவர் திருவடி போற்றும் சேக்கிழார் சுவாமிகள் 'ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணிவரத்தாம் அஞ்சும்' என பெரிய புராணத்தால் விளக்குதலாலும் சிவநாமம் சொல்லித்தான் தெளிவு பெறலாம் என பின் வநத பெரியார்கள் வலி உறுத்திச் சென்றதாலும் அடியேன் சிவநாமம் சொல்லி தொண்டர் நாள்தொறும் சென்று திருக்கேதீச்சரத்தைத் துதி செய்தலைத் தடுத்திடல் ஓர் சாதாரண செயலாகக் கொள்ள முடியாது.

சைவம் வளர்த்திடும் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராகிய நாம் நம்மை எவர் எவ்வாறு புறங்கூறினும் உண்மையை எடுத்துக் காட்டல் என் பணி. நாம் இதில் ஓர் வாதாட்டத்தையோ கருத்து வேற்றுமைகளையோ விளைவிக்க விரும்பாது சிவனருள் வழி இதற்கு ஓர் சுமுகமான தீர்ப்பை யாவரும் முயன்று செய்வார்கள் எனும் நல்நோக்கால் இவைபற்றிய ஜோதி சுவாமிகளின் கடிதத்தையும் அடுத்து சரசாலை நேயர் ஒருவரின் கடிதத்தையும் இப்பால் தருகின்றோம்.

இப்படியான ஓர் தடையைத் திருப்பணிச்சபை செய்திடும் போது அப்படிச் செய்வதால் எழக் கூடிய கருத்து வேற்றுமைகளையும் சிவநெறியில் விளையக் கூடிய இன்னல்களையும் சிந்தித்தே செயல் பட்டிருக்க வேண்டும். திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் அன்று நடைபெற்ற செயலிற்கு தமது சபையை உடன் கூட்டி இந்தத்தடையால் சைவ நெறியில் எழக்கூடிய வில்லங்கங்களை உத்தேசத்து ஆவன செய்தல் வேண்டும். அல்லாதிருந்தால் திருக்கேதீசசரம் சிவனடியார்களது வழிபாட்டுச் சுதந்திரத்தில் தாம் கைவைக்கின்றது என்ற பழியைப் பெற்றுக் கொள்ள நேரிடும்.

பேரன்புமிக்க ஆசிரியர்க்கு

அன்பு வணக்கங்கள்.

தங்கள் சந்திரதீபம் இதழில் ]8 6 79] திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற அசம்பாவிதத்தைப் பற்றிப் படித்தோம். அவ்விடயத்தை நாம் பத்திரிகையில் போட எண்ணாத போதிலும் அது இடம் பெற்று விட்டது.

கடைசியாக வந்த இதழ் 2 சுடர் 14ல் கௌரவ செயலாளரின் பதில் வாசித்து ஆச்சரியமடைந்தோம். அங்கே நடைபெற்ற சம்பவம் பற்றித் திரித்து மாற்றிப் புனைந்து பஞ்சாட்சரத்தைப் பஜனையில் பாடினதாக கருத்துப் பட பஞ்சாட்சர வியாக்கியானமும் விளக்கமும் கூறினமை எமக்குத் தேவையில்லை. ஏனெனில் நாம் பஞ்சாட்சரச் சிறப்புக்கள் மகிமைகளைப் பற்றி பல மகான்களிடம் கற்றும் கேட்டும் தெளிவாகச் சிந்தித்தும் உள்ளோம், மற்றவர்கட்கு அவர் பதில் உதவட்டும். அவர்கள் உண்மையை மறைதது மறுத்தாலும் அவர்களின் மனச் சாட்சியே அவர்களை உறுத்தும.

மிக முக்கியமாகவும் உறுதியாகவும் கூறுவது யாதெனில் அன்று சுவாமி வீதி வலம் வரும போது நாம் பஞ்சாட்சரத்தை பஜனையில் சொல்லவேயில்லை. பஜனை ஆரம்பித்த சில நிமிட நேரத்திற்குள் காரியதரிசியின் உத்தரவுப் படி தடுக்கப்பட்டோம். அவ்வேளையில் திருமுறைகள் அன்றி வேறொன்றும் படிக்கக் கூடாது என அறிவிக்கப்பட்டதேயன்றி பஞ்சாட்சரம் பற்றியோ வேறேதேனும் பற்றியோ குறிப்பிடப்படவில்லை.

இரண்டொரு தினங்களின் பின் வழிபாட்டிற்குக் கோவிலுக்குள் நாம் சென்ற சமயம் உபதலைவரும் காரியதரிசியும் பேசிக் கொண்டிருந்தனர். அவ் வேளையில் காரியதரிசி அவர்கள் எம்மை நோக்கி முன்னமே தாம் சொல்லிவிட்ட உத்தரவை ஊர்ஜிதம் செய்து இழிவாக பேசினாரன்றி பஞ்சாட்சரத்தைப் பற்றி யாதொரு வார்த்தையும் பேசினாரில்லை.

ஏனைய யுகங்களைப் போலன்றிக் இக்கலியுகத்திலே இறைவன் நாம சங்கீர்த்தனம் ஒன்றாலேயே, முக்தி பேற்றையடைலாமென வேதங்கள் முழங்குகின்றன.

தேவாரம் பாடிய மூவரும் நமச்சிவாயத் திருப்பதிகங்களை அருளியுள்ளார்கள். திருமுறைகளைச் சற்றேனும் கற்றவர்கட்கு ஸ்தூல பஞ்சாட்சரத்தைப் பாடும் படி ஆக்ஞை இட்டிருக்கிறார்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள் ''சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா திருநாமம் எனக் கொருகாற் பேசாயே'' எனவும் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய முதற் பதிகத்திலேயே 'உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்' என்றும்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நா நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன் னெறி காட்டும் என்றும்;

''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்'' எனவும் பண்டைக் கலமாக உன் நாமத் தெழுத்தஞ்சு என்நாவிற் கொண்டேன் எனவும் பாடியிருக்கிறார்கள்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளும் வழுக்கி வீழினும் உன் திருப்பெயரல்லால் அறியேன் என்றும் அருளியிருக்கிறார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகளும் நமச்சிவாய வாழ்க எனச்சிவபுராணத்தை ஆரம்பித்துப்

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியே நமச்சிவாய சய சய போற்றி போற்றி.

என்று திருச்சதகத்தில் அருளினார்கள்.

ஆனயநாயனார் தமது புல்லாங்குழலிலே எழிசையுடன்பஞ்சாட்ரத்தை இசைத்து முக்தி பேறடைந் துள்ளார்கள்.

மேலும் மாணிக்கவாசக சுவாமிகள் ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோஎன்று பாடுகிறரே, அங்கே தான் சிவநாம பஜனையைக் காண்கிறோம். சிவ பெருமானை வெவ்வெறு நாமங்களால் பாடுவதே சிவநாம பஜனை.

மேலும் அப்பர் சுவாமிகள சங்கரா சய போற்றி போற்றி என்றும் வாயே வாழ்த்து கண்டாய், முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான் வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் என்றெல்லாம் பாடிவைத்திருக்கிறரே இப் பொன்னான வார்த்தைகள் என்ன பேசுகின்றன என நாம் சிந்திக்க வேண்டும்.

தங்கள் 29 9 78 இதழ் 2 சுடர் 2 பத்திரிகையில் நம்கிளைகள் கெடாது வாழ வழிவகுக்க நீவிர் சிவனை நன்கு போற்றுமின்கள் என்ற தலையங்கத்துடன் திருஞானசம்பந்தப் பெருமானின் 'நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே ஆளாயஅன்பு செய்வோம் மடநெஞ்சே அரன் நாமம் கேளாய்' என்றுதொடங்கும் பதிகமும் அதன் உரையும் மிகத் தெளிவாக விளக்குகின்றதன்றோ?சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாயநமவும் பாடுவதற்கு உரியதெனபதை

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலியூர் அரனே என்னும் அப்பர் சுவாமிகள் பாடல் நிரூபிக்கிறது.

சிவ என்னும் மகாகாரண பஞ்சாட்சரத்தைப் பற்றித் திருநாவுக்கரசு சுவாமிகள்.

சிவனெனும் நாமந் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்
அவனெனை யாட்கொண்டளித்திடு. மாகிலவன்றனை யான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி யானென்று எதிர்ப்படுமே

என்றும்சிவனெனும் ஓசைஅல்லது தறையோம் உலகிற் திருநின்றசெம்மை உளதே என்று பாடுகிறார்கள். திருமூலநாயனாரும்

சிவ சிவ என்கிலர்தீவினையாளர்சிவ சிவ என்றிடத் தீவினைமாளுந்
சிவ சிவ என்றிடத்தேவருமாவர் சிவ சிவ என்னச்சிவகதிதானே.

என அருளிய பாடலிலும் சிவ எனும்நாமம், பாடிப்பணிவதற்குரியது என்பது தெளிவு.

திருக்கேதீச்சரத்தில் சுவாமி வீதிவலம் வரும் போது சில பாடசாலைத திருவிழாக்களில் பாடசாலை ஆசிரியார்கள் மாணவர்களுடன் திருமுறை ஓதினார்கள். சில பாடசாலைத் திருவிழாக்களில் நாதஸ்வர இசையுடன் மட்டுமே, வீதிவலம் நடைபெற்றது. அங்குள்ள தேர்ச்சி பெற்ற ஓதுவார் மூர்த்திகளையும் திருமுறைத் திருவிழாவில் மட்டும் பயன் படுத்தினார்களேயன்றி மற்றைய திருவிழாக்களில் பயன் படுத்தப் படவில்லை. திருமுறைகளை ஓதும் சங்கீத வித்துவான் ஒருவரை பிள்ளைகட்கு சொல்லிக் கொடுக்கும் படி நான் கேட்ட போது ஏற்கனவே பயிற்சி இல்லாத பிள்ளைகட்கு சொல்லிக் கொடுப்பது கடினமென்றார். இப்படிப் பட்ட விழாவொன்றில் அன்பர்களின் வேண்டு கோளின்படி, சின்னஞ் சிறார்களுடனும் பெரியோர்களுடனும் ஆனந்தமாக ஆர்வத்துடன் நாம ஆரம்பித்த நாம பஜனை திடீரென நிறுத்தப் பட்டது.

ஆலய வழிபாடு சரியை கிரியை ஆகியவற்றிற்குரிய மேலான வழிபாடு. ஜீவன்முக்தர்கள் யோகசு சித்தர்கள் ஞானிகள் துறவிகள் ஆலய வழிபாட்டைப் பின்பற்றுவதே உலகிலுள்ளோர் உய்யும் பொருட்டே யாகும். வாயாரப் பாடினாற்றான் மனம் ஒன்றுபடும், சிந்தனை சிவனை நாடும்.

இக் கருத்துக்களைச் சிரமம் பாராது முழுவதையும் தங்கள் பத்திரிகையில் போடும்படி வேண்டிக் கொள்கிறேம்.

முழுதும் உண்மை ஒரு பொல்லாப்புமில்லை,

இங்ஙனம். காங்கேசந்துறவி

## சரசாலை நேயர் வருத்தம்.

கனம் ஆசிரியர்சந்திர தீபம்.கொக்குவில்.

(சந்திரதீபம்) 8-6-79 இல் வெளி வந்த இதழில் 6ம் பக்கத்தில் கோவிலில் ஆங்கிலத்தில் கட்டளை என்னும் தலைப்பில் ஒரு விடயம் வாசித்தேன். அதன் படி ஆலயத்தில் சிவ நாமம் சொல்லக் கூடாது என அவ் ஆலய காரியதரிசி மூலம் தடுக்கப் பட்டது ஆலயக் கட்டுப் பாட்டு விதிகளில் அது ஒன்றா.? அல்லது விநாயகர் சந்நிதியில் சிவ நாமம் சொல்லக் கூடாது என்று காரியதரிசி தடுத்து இருக்கலாமா? புரியவில்லை.

எனவே வாக்குவாதம் நடை பெற்ற பிறபு சொன்னால் தடுப்பேன் என்று ஆங்கிலத்தில் கட்டளை இடப் பட்டது. துறவியும், காரியதரசியும் சட்டத்தரணிகள் என பத்திரிகை மூலம் அறிந்தேன். தமிழ் மக்களின் இந்து சமய சிவ ஆலயததில் ஆங்கிலம் பேசப் படாது. சரி இருவரும் ஆங்கிலத்தில் படித்த சட்டத்தரணிகள் போலும்! ஆனல் சிவ நாமம் சொல்லக் கூடாது திருமுறைகள் தான் ஓதப்பட வேண்டும் என்று கூறப் பட்டதன் காரணம் தெரிய வில்லை. எனவே அக் காரணம் தான் எமக்கு தேவை? ஆங்கி த்தில் ஏன் சொல்லப் பட்டது.?

இதற்கு பதில் 29.6.79 இல் வெளி வந்த இதழில் படித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன். திருவைந்தெழுத்தின் பாகங்கள் தன்மைகள் பற்றி விளக்கம் தரப்பட்டு இருக்கிறது.

ஆங்கிலத்தில் இடப்பட்ட கட்டளைக்கு காரணம் ஒந்த இதழில் [29.6.79] கொடுக்கப் பட்ட திருவைந் தெழுத்தின் தன்மைகளை விளக்கச் சொல்லி துாவி தங்களை கேட்கவில்லை! தாங்கள் கொடுத்த பதிலும் அதற்கு மாறுனது.

இங்ஙனம்
கீழ்படிவுள்ள அ.புகழேந்தி

# அந்தோனியார் கோவிலுக்கு சைவமக்கள் செல்வதையிட்டு அந்தணர்கவலை

## ஐந்து செவ்வாய் அந்தோனியார் கோவிக்கும் ஏழு செவ்வாய் துர்க்கை அம்மன் கோவிலுக்கும் சென்று வழிபட்டால் எண்ணியவை சித்தியாகும் எனும் செய்திகள் பரவுகின்றன.

இப்படிப் போனல் எண்ணியவை சித்தியாகுதாம் என்று ஒரு கதை யாழ்ப்பாணத்து பலவிடமும் பேசப்பட்டு வருகிறது. காகம் போய் இருக்க பனேங்குலையில் பழுத்த பழம் விழும் நிலையில் விழுந்தால் காகம் இருந்ததால் பனம்பழம் விழுந்தது என்று கருதுவாரும் உண்டு. அது ஒவ்வொருவ நடைய மன நிலையைப் பொறுத்தது. இதனலே உண்மையை விளங்காது பிறருடைய சொல்லைக் கேட்டு அல்லது பிறரைப் பார்த்து சில ஆலயங்களுக்கு போதல் நம் சைவமக்களிடையே இன்று பெருகிக் கொண்டு வருகிறது. இதை நாம் தவறு என்று சொலலாதிருந்தாலும் உண்மை அன்பிற்கு இவை உகந்தவை அல்ல என்பதை நினைவுபடுத்துகிறேன். நம் முன்னைப் பெரியோர் சிறு தெய்வ வழிபாடுகளை சிறந்ததெனக் கொள்ளவில்லை, ''சென்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்' என திருநாவுக்கரசர் பெருமான் சொல்வதை நீங்கள் சிந்தித்தால் இது தெளிவாகும். மக்கள் அன்றுட வாழ்வின் சிக்கல்களை தீர்ப்பதற்கு அல்லது காதல் களவு வெளிப்படுதல் விரைவு கலியாணம் இவற்றைப் பெற விரும்பி ஐந்து செவ்வாய் ஏழு செவ்வாய் என்ற முறையில் போதல் ஓர் அருளுடைய செயலாக நாம் கொள்ள மாட்டோம். இவை பெறுதற்காக பாண் கொடுத்து மெழுகுதிரி கொடுத்து காசு கொடுத்து விளக்குப் பிடித்து காசு கொடுத்து பொட்டுக் கொடுத்து சங்கிலி கொடுத்து சித்தி பெற விரும்பினல் அது எம் சைவ நெறியை மாசு படுத்தும் செயலாகவே நாம் கருதுகிறேம். நல் ஒழுக்கம் தலை நின்று நாள் தோறும் இறைவன் கோயில் சென்று கும்பிட்டு எம் நாயன் மார் அருள் பெற்றனரேயன்றி காசு கொடுத்து தேர்கட்டி கோபுரம்கட்டி கச்சேரிவைத்து திருவிழாச் செய்து அருள் பெற்றரென்று எங்காகிலும் ஒரு பாடலில் சொல்லவில்லை. பொன்னினல் தேர்கட்டுவதிலும் கோபுரம் கட்டுவதிலும் கோவில் வியாபார முறைகளை அகற்றி தருமத்தையும் நல்ஒழுக்கத்தையும் வளர்த்திட இப்பொருள்களை பாவித்தல் மிகநன்று. தேவையற்றவகை சித்திரத் தேரும் கோபுரமும் பெரிதல்ல. தரும உணர்வும் நல்ஒழுக்கமும் தான் மனிதனுக்குத்தேவை, இது பற்றி ஒருஅந்தணருடன் நடத்திய நற்பயன் தரும் கலந்துரையாடலைக் கீழே தருகிறேம்.

ஒரு நாள் ஓர் குருக்களைக் கண்டேன். அவர் என்னை நோக்கி இங்கு பாரும் நீர் எங்களில் மட்டும் பிழை காணுகிறீர். உங்கே உங்களது ஆட்கள் அந்தோனியார் கோவிலுக்கு 5 செவ்வாய் பாணும் மெழுகுதிரியும் கொண்டு போகினம். அதைப் பற்றி உமது பேப்பரில் எழுதினல் என்ன. உமக்கு எங்களோடு தான் கோபம் போலும் என்று தமது வழமையான புன்சிரிப்புடன் சொன்னர்.

அப்போது நான் அவரை நோக்கி ஐயா என்னஇது நீங்களும் இப்படிச் சொல்லலாமோ? நான் ஏன் ஐயா அந்தணர் சமூகத்துடன் கோபிக்க வேண்டும். அல்லது கண்டிக்க வேண்டும், என்னைப் பலகாலமாக நீங்கள் தெரிந் துள்ளீர்கள். என்றுலும் என் வாழ்வில் எமது அந்தணர் குலத்தை துன்புறுத்தி அல்லது இகழ்ந்து நான் பெருமை அடைய வேண்டும் அல்லது பொருள் ஈட்ட வேண்டு மென நினைப்பவனே? இல்லையே! என் பத்திரிகையை நான் தொடங்கிய நோக்கம் இன்று அந்தணா குலம் தாம் வாழவேண்டியஉயர்ந்த நெறியைக் கைவிட்டு மிகு கீழ்மையான செயலில் ஈடுபடுகின்றது. தந்தை பெரிய குருக்கள். மகன் சாண்டோ அடுத்த மகன்வில்லுப்பாட்டில் கோமாளி! இந்த மாதிரி பிராமண குலம் பாழ்பட்டுப் போக இதை ஒரு நிலையில் யாராகுதல் எடுத்து விளக்கி இங்கு பாருங்கள் நீங்கள் வாழ வேண்டிய உயர்விற்கு இது பொருந்தமன்று. உங்கள் முன்னைப் பெரியோர் இப்படி வாழவில்லை. நீங்கள் தான் இப்படி. இதனலே கோயில்கள் கூத்து மேடையாயின வியாபாரமாயின; அடுத்து பஞ்சமா பாதகங்களுக்கும் ஏற்ற இடமாக வசதிப்பட்ட இடமாக மக்கள் கருதும் படி உங்கள் குலத்து நடத்தை ஆக்கிவிட்டது.

உண்மையில் சந்திரதீபம் போன்ற ஒரு பத்திரிகையை பிராமணசமுதாயமே நடத்த வேண்டும். கோவிலில் நடைபெற வேண்டிய புனிதச் செயலை புண்ணியச் செயலை வலி உறுத்தி பாதகச் செயலைக் கண்டித்து மக்களை ஆகமவழிநீங்கள் வழிப்படுத்த வேண்டியது அவசியம். இன்று நம் சைவக் கோவிலில் நடைபெறும் அமங்கலமான செயல்களைக் கண்ணுரக் கண்டும் நீங்கள் மௌனம் சாதித் துள்ளீர்கள். வீடு கொழுத்தும் அரசருக்கு மந்திரி போல தீயவழியில் மக்கள் போக நீங்கள் புத்தியும் சொல்லிக் கொடுப்பவராக வந்து விட்டது. பசுவைக் கொன்று புலியை வளப்பவராகின்றீர்கள். கோயிலில் நடைபெறும் உங்கள் தருமங்கள் அருகி பதில் வேடிக்கையும் விண்ணணமும் பெருகியது என்றதும் குருக்கள் என்னை நோக்கி நாங்கள் தான் தனிய குற்றங்கட்கு பொறுப்போ? என்றதும் நான் சொன்னேன் ஐயா உங்களை மட்டும் நான் சொல்ல வில்லை: இன்று சமயப் பிரசாரம் கோயிலில் அபசாரத்தை பெருக்குவதாக உளது. அதற்காகவே அத்தனை பிரசங்கிகளையும் நான் என் பத்திரிகை மூலம் ஐயோ நீங்கள் பிழை விடுகிறீர்? கவனம்! நீங்களும் கோயில் நடைமுறையைச் சொல்லுங்கோ? கோவிலில் மக்கள் சென்று வழிபடும் நலன்களைச் சொல்லுங்கோ. 24 குளாயில் நீங்கள் பிரசங்கம் [illegible] த்து உங்கள் பக்கவாத்தியக் காரரும் நீங்களும் [illegible] தன ஒழுகிக் காட்டினல் இளம் சந்ததியினர் மிகு மோசமான நிலைக்கு ஆளாவார்கள். அவர்கள் தம் நலம் கெட்டு உயர்வு கெட்டு வாழ்கை என்பது ஒரு வேடிக்கை என எண்ணி பஞ்சமா பாதகங்களையும் கூசாமல் செய்யத் தலைப்படுவார் என்று என் பத்திரிகை மூலம் கூக்குரல் எழுப்பினேன். எந்த ஒரு சமுதாயமும் உண்மை அன்பு அருள் இவற்றைக் கடைபிடித்து வாழ்ந்தால் பிறர் பேச்சிற்கு இடம் வராது! அப்படி வேணுமென்று சிலர் நம்மைத் துயறுத்த எண்ணின் அவர் துன்புறுவாரேயன்றி நமக்கு அவை எய்தாது எனக் கூறினேன். ஆனல் பிரசங்ககாரர் என் கூக்கூரலைத் தம்மை நாம் இகழ்வதாகக் கருதி பல வஞ்சனைகளைப்புரியஎத்தனித்ததுள்ளனர். கோயில்மேடைமேல் என்னை இகழ்ந்தனர். வஞ்செயலை தூண்டினர். நான் இவை எதற்கு மேனும் அஞ்சவில்லை. எனது நோக்கம் தூயது. நான் முதற்கண் சைவநெறியில் பிராமண சமுதாயம் உயர்ந்த நெறியுடன் வாழ்ந்தால் அன்றி கோயில்கள் சிறக்காது. சைவம் தழைக்காது. பிரசாரத்தைப் பற்றி அக்கறை இல்லை. பிரசாரத்தை இப்படியான பத்திரிகை மூலம் அல்லது பாட்சாலைகளில் போதனை மூலம் செய்யாம்.

அதை விடுத்து இறைவன் சந்நிதியில் கோவிலில் போய் பிரசாரம் செய்வதென்றுல் அது எம் சமயநெறிகளைக் கீழ் இறக்கி அருளுக்குப்பதில் இருளை மிகச் செய்யும். எல்லாச் சைவ மக்களும் இதை முதல் உணரவேணடும். எனக்கென்ன ஐயா! யாரும் எப்படியும் நடந்து போகட்டன். நமது ஒழுங்கை நாம் பார்ப்போம் என்றுல் உண்மையில் ஐயா என் மனம் என்னை அறியாமல் ஐயோ அருமந்த சைவ நெறி தனது தூய்மை கெட்டு பாதகச் செயல்களால் வஞ்சனையால் கொலை முதலிய கொடுஞ் செயலால் பாழாகிப் போக பார்த்திருக்க மனமில்லை. ஐயோ முருகன் அருளேயான ஞான சம்பந்தன் வந்து வளர்த்துப் போன சைவ நெறி இன்று தன் தூய்மை கெட்டு ஒவ்வொரு கோயிலும் மிலேச்ச நெறிக்குரிய கூத்துக் கொட்டையாக கண்காட்சி பொருட்காட்சிக்குரிய இடமாக விநோத உடைப் போட்டிக்குரிய இடமாக மாறிடப் பார்த்திருக்க மனமில்லை. ஏதோ ஞானசம்பந்தப் பெருமான் திருவடி துணையாக என் பணியைச் செய்வோம். என எண்ணினேன்.

நான் இதில் ஏதும் வஞ்சனை செய்யவில்லை, அவர் தான் சைவம் வாழவெனின் அந்தணர் வாழ வேண்டும் என முதற்கண் திருப்பாசுரப் பாடல மொழிந்தார், எப்படி வாழவேண்டும் என்றுல் வீடு வாசல் கார் சினிமா சேர்க்கஸ் இவைகளை அநுபவித்துவாழ் என்றகருத்தாகவில்லை. அந்தணருடைய முதற்கடமை யாகம். அதற்குரிய புனிதநெறிக்கு அவர்ஒழுகவேண்டுதலின் அவருடன் தேவரும் பசுவும்வாழ்க எனக் கூறினர். அடுத்து எல்லா ஆலயத்திலும் இறைவன அருச்சனை. சிறந்தது இதனைச் செய்ய வேணடியது அவர் கடமை. ஆதலால்இவை சிறந்து விளங்கிடவெனின் அவர்கள் தம குலத்து சீரிய ஒழுக்கமுடன் வாழ வேண்டும். அல்லா திருந்தால் எல்லா மக்களையும் சேர்த்து வாழ்க மனிதர்கள் எனப் பாடியிருப்பார். அதைஒருபிராமணராகுதல் உணரக் காணேமே! தனது குலத்தவர் சம்பந்தர் சொல்வதைக் கூட அந்தணர் மதியாது போனல் நாம் என் செய்யலாம்? என்று சொல்லுமளவில் குருக்கள் குறுக்கிட்டு நீர் சொல்வது சரி, இன்று எல்லாரும் பிழையாய்த் தான் நடக்கினம். நீர்சொல்வதில் ஏதும தவறில்லை, இந்தக் காலத்தில் இதைச் சொல்லப் போனல் எல்லாருடனும் வீண்பகைக்கு ஆளாக வேணும். தெரியாதே காலம் பிழையான காலம் தற்செயலாக நீா போற வாற வழியல் ஆரும் ஒன்றைச் செய்து போட்டால் பிறகு என்ன செய்யுறது. உமக்கு நீர் சொல்லுறது சரி என்று சொல்லுறவையும் அங்கு உதவப் போயினமோ? அதை நீர் யோசியும் என்றுர். அதற்கு நான் பதில் சொல்லமுன் குருக்கள் சொன்னர் அன்று இங்கு என்னிடம் சிலர் வந்து வெட்கம் கெட்ட கதையைச் சொன்னர்கள்.

அது தான் சைவப் பெணகள் சிலர் அன்று அந்தோனியார் கோவில் கூடுகாவும் விழாவிற்கு அவையும் ஊர்வலத்தில் போனவையாம்; அப்பொழுது அந்த கத்தோலிக்க பெணகள் இட நெருக்கடி காரணமாக இவையைப் பார்த்து நீங்கள் இங்கு வந்து எங்களை ஏன் நெருக்கிறியள். உங்கள் கோவிலைப் போய் கும்பிடுங்களேன் என்றுர்களாம் இவை ஒன்றும் பேசமுடியாது நின்றினமாம். இப்படிக் கதை. இங்கு பாரும் நான் எனது சிவன் கோவில வாலஸ் தாபனம் பண்ணி எத்தனை வருடம், அந்தக் கட்டிடத்தை ஒருவாறு பூர்த்தி பண்ணி கும்பாபிசேகத்தை நடத்திட என்றுல் எங்கடை ஆட்களுக்கு அதில் சிறிதேனும் அக்கறை இல்லை. அவையள் அந்தோனியார் போன்ற இப்படியான கோவிலிற்கும் அல்லாதிருந்தால் எங்காகிலும்கோவிலில் வேடிக்கை விண்ணணத்திற்கு போகினம், போய்ப் போய் காசு கொடுக்கினம் என கவலையுடன் சொன்னர், நான் சொன்னேன் ஐயா இந்த ஒரு விடயத்தைக் கொண்டு நம் சமய நிலையை நீங்களே யோசியுங்கோ. சைவமக்கள் அந்தோனியார் கோவிலிற்கு போய் அருள் பெற வந்தமை எதற்காக? எங்கடை சைவக் கோயில் எல்லாம் ஒரளவு சினிமாக் கொட்டகை என்றே சொல்லலாம். அல்லாது கலியாண மண்டபம்! ஆனல் அவர்கள் தங்கள் கோவிலை ஒழுங்காக நடத்துகின்ற படியால் அங்கு மக்கட்கு மனம் படியுது. அங்குள்ள கட்டுப்பாட்டில் ஏதாவது சிறிதேனும் எம் சைவக்கோவிலில் உண்டோ? உங்கள் கோவிலைப் போல் அவர்களும் கோவிலில் பாட்டுக் கச்சேரி வில்லுப்பாட்டு அல்லது அழகி ஒருத்தி இளனி விக்றுள் கொழும்பு வீதியிலே என்ற சினிமாப் பாடலை நாகசுரம் ஊத காவடியாட்டம் நடத்துகின்றுரோ என்றதும் குருக்கள் உம்மோடை கதைக்கத் தொடங்கினல் நெடுக உதைக் கதைக்கலாம் நான் அவசரமாய் எங்கோ போறேன் என ஒரு புன் சிரிப்புடன் மீண்டு கொண்டார்.

---

இப்பத்திரிகை கொக்குவில் மேறகில் இருக்கும் கந்தபுராண பெரிய புராண உரை ஆசிரியர் வை.நல்லையா அவர்களால் இலங்கை மணி சைவ நாற்பதிப் பகத்தில் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org